Registered as a Newspaper    பக்கங்கள் 06    விலை: ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 04    திருவள்ளுவர் ஆண்டு 2024    ஆவணி 09    [25-08-1993]    புதன்கிழமை    ஓசை 188

## இராணுவ செலவீட்டில் சிறிலங்கா 2ஆம் இடம்

(லண்டன்)

சிறிலங்காவின் மொத்த தேசிய வருமானத்தில் 5.5 வீத நிதி படைகளுக்கு செலவிடப்படுகிறது பாகிஸ்தானுக்கு அடுத்தபடியாக படைகளுக்கு அதிக நிதி செலவிடும் ஆசிய நாடு சிறிலங்காவே என்று லண்டனிலிருந்து வெளியான மிலிட்டறி பலன்ஸ் என்ற நூல் குறிப்பிட்டுள்ளது. சர்வதேச தந்திரோபாய ஆய்வு நிறுவனம் இந்நூலை பிரசுரித்துள்ளது. விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தை அடுத்து சிறிலங்கா இராணுவ எண்ணிக்கையை அரசு 90,000 ஆக விரிவாக்கியது. இதனால் பாதுகாப்புச் செலவு உயர்ந்தது. பாதுகாப்புச் செலவுக்காக செலவிடப் (6ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலி - பூநகரி படகுச்சேவை

கிளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறுமென யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

## கடிதங்கள் உடன் சேர்க்கவும்

நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கப்பலுக்கு கடிதங்கள் எடுத்துச் செல்லப்படும் என யாழ் பிரதம தபாலதிபர் அறிவித்துள்ளார். [22]

# இன்று இதயபூமி - I வெற்றி நாள்; வடபகுதி எங்கும் கொண்டாட ஏற்பாடு

## ஊர்திகள், கண்காட்சிக்கு ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

மணலாற்றுப் பகுதியில் கடந்த மாதம் மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இதயபூமி-1 தாக்குதல் நடவடிக்கையின் வெற்றிநாள் இன்று வடபகுதி எங்கும் கொண்டாட ஏற்பாடாகியுள்ளது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இத் தாக்குதலின் வெற்றிநாளான இன்று ஊர்திகள் பவனி, கலை நிகழ்ச்சிகள், கண்காட்சி என்பன நடைபெற ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதேவேளை, வெற்றிநாளுக்குமுதல்நாளான நேற்றே இவ் வெற்றிநாளை முன்னிட்டு ஊர்திகள், கலைநிகழ்ச்சிகள் என்பன யாழ். நகரின் வீதிகளில் அவதானிக்கக் கூடியவையாக இருந்தன.


கடந்த மாதம் 25ஆம் திகதி மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் ஒருமின்னல்வேக அதிரடித்தாக்குதலை நடத்தினர். இதயபூமி 1 என பெயரிடப்பட்ட இத் தாக்குதலில் 70க்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டதும், பலர் படுகாயமடைந்தமையும், பெருந்தொகையான இராணுவத் தளபாடங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியமையும் தெரிந்ததே.

இத் தாக்குதலின் வெற்றியைக் குறிக்கும் முகமாகவே இதயபூமி 1 வெற்றி நாள் இன்று வடபகுதி எங்கும் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ் வெற்றிவிழாக் கொண்டாட்டங்களில் அலங்கரிக்கப்பட்ட ஊர்திகள், கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறவுள்ளன. இவ் ஊர்திகளும், கலை நிகழ்ச்சிகளும் அநேகமாக மண்கிண்டிமலை இராணுவ வெற்றியைக் குறிப்பவையாக அமைக்கப்பட்டுள்ளதாகவும் அறியவருகின்றது.

இவ் ஊர்திகளில் இத் தாக்குதலில் வீரச்சாவடைந்த போராளிகளின் உருவப்படங்களும், மேலும் சிறிலங்கா இராணுவத்தின் தோல்வியைச் சித்தரிக்கும் கேலிச் சித்திரங்களும், முகாம் தாக்குதல் போன்ற காட்சிகளு சித்திரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மண்கிண்டிமலை தாக்குதல் தொடர்பான மாதிரி அமைப்பு ஒன்றும் கோம்பைபன்மணல் மயானப் பகுதியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.



இதய பூமி 1 வெற்றிநாளை முன்னிட்டு, மண்கிண்டிமலை இராணுவ முகாம் மாதிரி அமைப்பை யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி செல்வராசா திறந்துவைப்பதையும், முல்லை மாவட்ட சிறப்புத் தளபதி அன்பு ஈகைச் சுடர் ஏற்றுவதையும் படத்தில் காணலாம்.

### மண்கிண்டிமலை தகர்ப்பு

## ஒரு மாதமாகியும் அரசு அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை

தமிழீழத்தின் இதயப் பகுதியில் தமிழர் படையணி தொடுத்த வெற்றிகரமான மண்கிண்டிமலை முகாம் தாக்குதல் சிங்களப் பேரினவாதத்தின் இதயத்தை உலுக்கி விட்டது. மாதம் ஒன்று கடந்து

இந்த நினைவு நாள் ஒரு வெற்றிநாளாக தமிழீழம் எங்கும் இன்று கொண்டாடப்படுகின்றது.

புவியியல் - இராணுவ ரீதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மணலாற்றுப் பகுதி

வரும் செய்திகள் தெரிவித்திருந்தன.

தமிழரின் இதயபூமியான மணலாற்றின் ஒரு பகுதியை ( 6-ஆம் பக்கம் பார்க்க )



## வெற்றி நாளையிட்டு



இதய பூமி 1 வெற்றிநாளை முன்னிட்டு, மண்கிண்டிமலை இராணுவ முகாம் மாதிரி அமைப்பை யாழ். மாவட்ட சிறப்புத் தளபதி செல்வராசா திறந்துவைப்பதையும், முல்லை மாவட்ட சிறப்புத் தளபதி அன்பு ஈகைச் சுடர் ஏற்றுவதையும் படத்தில் காணலாம்.



மண்கிண்டிமலை மாதிரி அமைப்பில், கரைக துப்பாக்கியுடன் கூடிய இராணுவத்தினரின் நிலை ஒன்றை மக்கள் பார்வையிட்டுச் செல்வதைப் படத்தில் காணலாம்.

# மண்கிண்டி மாதிரி அமைப்பு நேற்றுத் திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பின் வெற்றி நாள் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. இதனையொட்டி ஓர் அம்சமாக மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பு பற்றிய கோம்பையன்மணல் மயானப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி அமைப்பு நேற்று திறந்துவைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட சிறப்புத்தளபதி செல்வராசா நேற்று பிற்பகல் 2.00 மணிக்கு இந்த மாதிரி அமைப்பை திறந்து வைத்தார். முல்லைமாவட்ட சிறப்புத் தளபதி அன்பு ஈகைச் சுடர் ஏற்றிவைத்தார். இம் மாதிரி அமைப்பை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக அனுசரணையுடன் சிற்றூர்திகள் சங்கம் அமைத்துள்ளது.

மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பு வெற்றி நாளையொட்டி தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவு இதயபூமி I இது ஒரு வரலாற்று பதிவு என்ற நூலும் வெளியிடப்பட்டுள்ளது.

## கண்காட்சியை பார்வையிட திரண்ட மக்கள் கூட்டம்

(நமது நிருபர்)

மண்கிண்டிமலை இராணுவ முகாம் மாதிரி அமைப்பை பெருமளவு மக்கள் நேற்றுப் பார்வையிட்டனர்.

கோம்பையன் மணல் மயானத்தை மண்கிண்டிமலை இராணுவ முகாமாக மாற்றி அமைத்து 'இதயபூமி 1 வெற்றித் தாக்குதல் நிகழ்வை தத்ரூபமாக அமைத்திருப்பது மக்களை பெரிதும் கவர்ந்ததை நேரில் அவதானிக்க முடிந்தது.'

பெருந்தொகையில் சிறுவர் முதல் வயோதிபர்கள் வரை இங்கு திரண்டு சாரிசாரியாக வந்து முகாமைச் சுற்றிப் பார்வையிட்டனர்.

இதயபூமி 1 வெற்றிக்கு வழி வகுத்து வீரச்சாவைத் தழுவிக் கொண்ட பத்து மாவீரர்களது உருவப்படங்கள் உட்பட மணலாறு மாவட்டத்தின் வரலாறுகளும் அங்கு நடைபெற்ற தாக்குதல்கள் மற்றும் மணலாறு மண்ணில் மாவீரர்களானவர்களது உருவப்படங்களும் தனியான பகுதியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன, இதனை மக்கள் நீண்ட வரிசையில் பல மணி

( 6 ஆம் பக்கம் பார்க்க )

முகாம் மீது விடுதலைப்புலிகள் ஒருமின்னல்வேக அதிரடித்தாக்குதலை நடத்தினர். இதயபூமி 1 என பெயரிடப்பட்ட இத் தாக்குதலில் 70க்கும் காயமடைந்தமையும், பெருந்தொகையான இராணுவத் தளபாடங்களை விடுதலைப் புலிகள் கைப்பற்றியமையும் தெரிந்ததே.

இதயபூமி 1 வெற்றி நாள் இன்று வடபகுதி எங்கும் கொண்டாடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ் வெற்றிவிழாக் கொண்டாட்டங்களில் அலங்கரிக்கப்பட்ட ஊர்திகள், கலை நிகழ்ச்சிகளும் அநேகமாக மண்கிண்டிமலை இராணுவ வெற்றியைக் குறிப்பவையாக அமைக்கப்பட்டுள்ளதாகவும் அறியவருகின்றது.

இவ் ஊர்திகளில் இத் தாக்குதலில் வீரச்சாவடைந்த போராளிகளின் உருவப்படங்களும், மேலும் சிறிலங்கா இராணுவத்தின் தோல்வியைச் சித்தரிக்கும் கேலிச் சித்திரங்களும், முகாம் தாக்குதல் போன்ற காட்சிகளு சித்திரிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை மண்கிண்டிமலை தாக்குதல் தொடர்பான மாதிரி அமைப்பு ஒன்றும் கோம்பையன்மணல் மயானப் பகுதியில் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

### மண்கிண்டிமலை தகர்ப்பு

# ஒரு மாதமாகியும் அரசு அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை

தமிழீழத்தின் இதயப் பகுதியில் தமிழர் படையணி தொடுத்த வெற்றிகரமான மண்கிண்டிமலை முகாம் தாக்குதல் சிங்களப் பேரினவாதத்தின் இதயத்தை உலுக்கி விட்டது. மாதம் ஒன்று கடந்துவிட்ட நிலையிலும் முகாம் தகர்ப்பு கொடுத்த அதிர்ச்சியிலிருந்து சிங்கள அரசு இன்னமும் மீளமுடியாது தவிக்கிறது. இவ்வாறு மண்கிண்டிமலை இராணுவ முகாம் தகர்ப்பு வெற்றித்தினம் இன்று கொண்டாடப்படுவதை முன்னிட்டு யாழ். மாவட்ட அரசியல் துறை விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

சிங்களப் பேரினவாதத்திற்கு மரண அடியொன்று கொடுத்த மண்கிண்டிமலை முகாம் தகர்ப்பின் ஒரு மாத நினைவுநாள் இன்றாகும்.

இந்த நினைவு நாள் ஒரு வெற்றிநாளாக தமிழீழம் எங்கும் இன்று கொண்டாடப்படுகின்றது.

புவியியல் - இராணுவ ரீதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த மணலாற்றுப் பகுதியில் மண்கிண்டிமலை என்னும் இடத்தில் அமைத்து வைத்திருந்த இராணுவ முகாம் ஒன்றின் மீது புலிகளின் அணி மின்னல் வேகத் தாக்குதலை நடாத்தியிருந்தது. இதயபூமி -1 என்று பெயரிட்டழைக்கப்பட்ட இம்முகாம் தாக்குதலில் 70 ற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டிருந்தனர். நவீன ஆயுதங்களும், பெருந்தொகையான வெடி பொருள்களும் புலிகளால் கைப்பற்றப்பட்டிருந்தன புலிகள் கைப்பற்றிய ஆயுத தளபாடங்களின் மொத்தப் பெறுமதி சுமார் ஐந்து கோடி ரூபா என சிங்கள தேசத்திலிருந்து வரும் செய்திகள் தெரிவித்திருந்தன.

தமிழரின் இதயபூமியான மணலாற்றின் ஒரு பகுதியை

( 6-ஆம் பக்கம் பார்க்க )

## வெற்றி நாளையிட்டு ஊர்திகள், கலைநிகழ்ச்சிகள்

(நமது நிருபர்)

விடுதலைப் புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்ட மண்கிண்டிமலை " இதயபூமி I " வெற்றி நாளை முன்னிட்டு வலிகாமத்தின் பல பாகங்களிலும் வலிகாமம் கலை பண்பாட்டுக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட கலை நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட இருக்கின்றன.

இதன் முன்னோடி நிகழ்வாக நேற்று இரவு வலிகாமத்தின் பல பாகங்களிலும் வீதி நாடகம் ஒன்று நடாத்தப்பட்டது.

மண்கிண்டிமலை இதய பூமி I தாக்குதலில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் உருவப்படங்களைத் தாங்கிய வாகன ஊர்தி ஒன்று பிரதான வீதிகள் ஊடாக எடுத்துச் செல்லப்பட்டது.

இவ் அலங்கார ஊர்தி பிரதான வீதியோரங்களில் நிறுத்தப்பட்டு சிறிலங்கா இராணுவத்தினரின் தாக்குதல்களையும், போராளிகளின் பதில் தாக்குதல்களை சித்திரிக்கும் வீதி நாடகம் ஒன்றும் நிகழ்த்தப்பட்டது.

இக் கலை நிகழ்ச்சியை பெருமளவு மக்கள் மிகுந்த ஆர்வத்துடன் வீதிஓரங்களில் குவிந்து நின்று கண்டுகளித்தனர். (பா)

## புலிகளின் தாக்குதலில் கடற்படை அதிகாரி காயம்

கடந்த ஞாயிறன்று கிளாலிப் பகுதியில் தாக்குதல் நடத்திய சிறிலங்கா கடற்படை படகுகள் மீது புலிகள் நடத்திய பதில் தாக்குதலில் கடற்படை அதிகாரி ஒருவரும் சிப்பாய் ஒருவரும் காயமடைந்ததாக சிறிலங்கா வானொலி தெரிவித்தது

இதேசமயம் காயமடைந்த படையினரில் ஒருவர் மரணமடைந்ததாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. கடந்த ஞாயிறன்று கடற்படையினர் கிளாலிக் கரைப் பகுதியில் நடத்திய தாக்குதலில் மூன்று பொதுமக்கள் பலியானதும் கடற்புலிகள் பதில் தாக்குதல் நடத்தி கடற்படையினரை விரட்டியடித்தது தெரிந்ததே.

### உலங்குவானூர்தி நோட்டம்

நேற்று நண்பகல் 12-15 மணியளவில் சிறிலங்கா வான்படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தியொன்று மண்டைதீவு, பள்ளிக்குடா பகுதிகளுக்கு மேலாகவும் அப் பகுதி கடற் பிரதேசத்திற்கு ஊடாகவும் வட்டமிட்டுச் சென்றது. (21)

## அதிகாரிகளை விசாரிக்க இராணுவ விசாரணைக்குழு

[கொழும்பு]

மணலாறு மண்கிண்டி மலை இராணுவ முகாம் விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்டபோது அங்கு அந்நாளில் கடமையிலிருந்த படை அதிகாரிகள் மீது விசாரணைகளை மேற்கொள்ள இராணுவ விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

வடபகுதி இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல்றோகான் தலுவத்த, பிரிகேடியர் விஜேஉட்பட 15 பேர் அடங்கிய விசேட இராணுவக் குழு ஒன்றே இவ் விசாரணைக்குழுவில் இடம்பெறவுள்ளதாக தெரியவந்துள்ளது.

இக் குழுவின் தீர்மானத்தைப் பொறுத்தே இராணுவ அதிகாரிகளுக்கெதிரான வழக்கை யுத்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதா என்பது குறித்து அடுத்த வாரமளவில் தெரியவரும் என சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஏற்கனவே இராணுவமுகாம்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# செம்மலை பகுதி மீது ஷெல் வீச்சு இரு சகோதரிகள் படுகாயம்

வெலிஓயா ராணுவத்தினர் முல்லைத்தீவு பகுதி மீது நடத்திய எறிகணைத் தாக்குதல்களினால் இரு சகோதரிகள் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு 10 40 மணியளவில் வெலிஓயாப் பகுதி சிறிலங்கா இராணுவமுகாம் காவலரணிலிருந்து முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள செம்மலை பகுதியை நோக்கியே படையினர் அகோர ஆட்டிலறி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

இதனால் செம்மலையைச் சேர்ந்த சந்திரமோகன் ஜெயரமணி [வயது 27], இவரது சகோதரி கஸ்தூரி [வயது 10] ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.


உள்ளே.....

இதயபூமி I

வெற்றிநாள் சிறப்பிதழ்


August 23 Monday.

## வரி விளம்பரம்

### பழுது பார்க்க வாங்க விற்க

பழுதடைந்த கசற்றேடியோக்கள் மேசைசுவர் கைக் கடிகாரங்கள் உதிரிப்பாகங்களுக்காக வாங்கப்படும் விற்கப்படும். நிபுணர்களால் பழுது பார்த்துக் கொடுக்கப்படும். டில்கா வாச் அன்ட் றேடியோ ஹவுஸ், 84, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (வானவில்கூல் பார் அருகாமை) கிளை கண்டி வீதி சாவகச்சேரி (சி.7168)

### யாழ். பழைய புத்தகக் கடை

மக்களுக்கோர் அரிய சந்தர்ப்பம் உங்களிடம் இருக்கும் நீங்கள் பாவித்த தமிழ் ஆங்கிலப் புத்தகங்கள் சகல பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் நியாயவிலையில் பெற்றுக் கொள்வோம் கடிதம் மூலமோ நேரிலோ தொடர்பு கொள்ளுங்கள் நேரில் வந்து பெற்றுக்கொள்ளப்படும் ஆரிய சுனா வீதி (ஸ்ரான்லி வீதி), யாழ்ப்பாணம். (5763)

### தங்கப்பதக்கம் பெற்றார்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் கடந்த 1992ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சைவசமயப்பாடப் பரீட்சையில் ஆறாம் ஆண்டுக்குரிய அகில இலங்கை ரீதியில் முதலிடத்தை சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவி செல்விசதா சிவசர்மா மதுநந்தினி பெற்று தங்கப் பதக்கம் பெற்றுள்ளார் (24).

### மரங்களைப் பேண கோரிக்கை

கடந்த காலங்களில் பொது மக்கள் மற்றும் பல்வேறு அமைப்புகளாலும் எமது பிரதேசத்திலே வீதியோர மரநடுகை வதிவிட மரநடுகை, மாவீரர் மரநடுகை, மரநடுகை வாரம், கரும்புலிகள் தின மரநடுகை என பல்வேறு வகையான மர நடுகை நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1992ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த மனநிலையைவிட மக்கள் மனதில் மரநடுகை தொடர்பாக புதியதோர் விழிப்புணர்ச்சி தோன்றியதன் வெளிப்பாடே பல்லாயிரக்கணக்கான மரங்கள் நடுகை செய்யப்பட்டதும் காப்பாற்றப்பட்டதுமா

---

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

## பொதுச் சபைக் கூட்டம்

தனியார் கல்வி நிறுவன பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 27-08-1993 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00மணிக்கு எழிலகத்திற்கு முன்பாக அமைந்துள்ள புதிய விஞ்ஞானக் கல்விக் கழகத்தில் நடைபெறும். அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பொது நிர்வாக சபைக்கூட்டம் 9.00 மணிக்கு நடைபெறும்.

பொதுச்செயலாளர்

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்.**

(சி-7260)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

[5-8 1993]



அமரர்

### ந. பஞ்சலிங்கம் [கணா]

(நியூ பாக்கியம் கிளினிக் - பரந்தன்)

பிரபல ஆயுள்வேத வைத்தியர் (Doctor), கந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்டவர்

உதயம் 14-12-1953 அஸ்தமனம் 26-07-1993

அன்பின் திருவுருவாய் பாசத்தின் ஒளி விளக்காய் இருந்து திடீரென எம்மை ஆறாத் துயரில் மூழ்க வைத்து மீளாத் துயில் கொண்ட எம் அன்பு தெய்வமே எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே உங்கள் ஆத்மா சாந்தி அடைய கண்ணீர் பூக்களால் அர்ச்சிக்கின்றோம்.

திருமதி நவரட்ணம் நல்லநாயகி — தாய், மனைவி,
17/1, பிறவுண் வீதி, — பிள்ளைகள், சகோதரர்கள்,
2 ம் ஒழுங்கை, — சகோதரிகள் அண்ணி,
கந்தர்மடம் — மைத்துனர்கள், பெறாமக்கள்,
யாழ்ப்பாணம். — மருமக்கள், சிறியதாய், மாமா,
(சி-7255) — உறவினர் நண்பர்கள்.

---

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

---

## நினைவு கூருகின்றோம்... 1993-08-25

1986ஆம் ஆண்டு இதேதினத்தில் மன்னார் - 5ம் கட்டைப் பகுதியில் ரோந்து சென்ற சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

★ **ரமேஸ்** (சகாயம் - மன்னார்)

யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**உஸ்மான்/கிழங்கு** (அப்துல்காதர் சாதிக் - 687/3. அராலிவீதி - யாழ்)

மட்டு - வந்தாறுமூலையில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையின் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**ராமு** [பிரான்சிஸ் திலகம். 187/1, கடற்கரைவீதி, பாசையூர் - யாழ்]

1989ஆம் ஆண்டு ஆவரங்காலில் தேசவிரோதசக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட சர்வோதய வீதியைச் சேர்ந்த தமிழிளைஞன்.

1990ஆம் ஆண்டு மண்டைதீவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**முரளி** [பெண்டிக் குணபாலா - மரப்பாலம், செங்கலடி - மட்டு]

**குணா** [காத்தமுத்து நாதன் - எழுவான் கரைவீதி, வந்தாறுமூலை - மட்டு]

**கபில்** [ராமலிங்கம் ரவி - பெரியபுல்லுமலை - மட்டு]

**ராஜேஸ்** [முத்துக்குமார் சோமநாதன் - கொடுவாமடு, செங்கலடி - மட்டு]

**சதீஸ்/ரஜின்** [கணபதிப்பிள்ளை இரத்தினம் - முதலைக்குடா, முனைக்காடு - மட்டு]

**நிலக்சன்** [நாராயணபிள்ளை தயாளன் - கோயில்போரதீவு - மட்டு]

**பிரதீப்** [ஜோர்ஜ் வன்னியசிங்கம் - மூங்கிலடி வீதி, வந்தாறுமூலை - மட்டு]

**ரகுபரன்** [நாகப்பன் பேரின்பராசா - கித்துவெவ, கரடியனாறு - மட்டு]

**ராம்கி** [நவரெட்ணராஜா உமாசங்கர் - கந்தவேலி, கிளிவெட்டி - மூதூர்]

**மகிந்தன்** [சின்னத்தம்பி அருட்பிரகாசம் - 1-ம் வட்டாரம், இருதயபுரம் - மூதூர்]

**சண்முகம்/அன்பு** [கந்தசிவம் அன்பரசன் - 20 சி.. வீதி, இருதயபுரம் - மூதூர்]

**றெஜினோல்ட்** [இளையதம்பி குணசேகரம் - கல்லடி. ஈச்சிலம்பத்தை - மூதூர்]

**ராஜீவ்** [சு. நடராசா - திருமலை]

**லெப். இன்பன்** (கணபதிப்பிள்ளை குமரகுருபரன் - 2-ம் வட்டாரம், முள்ளியவளை - மணலாறு)

**லெப். ஜிம்கெலி** [இருஷ்ணமூர்த்தி கிருஷ்ணகுமார் - ஒலுமடு - நெடுங்கேணி]

**ஜொனி** [பீற்றர் சிங்கம் - 29, செட்டிகுளம் - வவுனியா]

**உதயகுமார்** [குமாரசாமி மகேந்திரகுமார் - நெளுக்குளம் - வவுனியா]

**கேதீஸ்** [பாலகிருஷ்ணன் சந்திரகாந்தன் - 179, சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி]

**சசி** [ஜெகநாதன் ஜெயசீலன் - 3-ம் கட்டைச்சந்தி முரசுமோட்டை - கிளிநொச்சி]

**வதனன்** (பொன்னுத்துரை இந்திரஜித் - 209, இந்திரஜித் வீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி]

**பரணி** [ம. சந்திரராஸ் - மன்னார்]

**கருணா** [சேது பூபாலசிங்கம் - புளியங்குளம், அடம்பன் மன்னார்]

**கிருபாகரன்** [பெரியகறுப்பன் காளிமுத்து, உடையார் வேலித்தோட்டம் - மலையகம்]

**தர்சன்/நந்தன்** [ஜோசப் அலெக்ஸாண்டர் - ஏயாப் போஸ்ட் - மலையகம்]

**கருணாநிதி** [சர்வகுலராசா சிவரூபன் - சித்தன்கேணி - யாழ்]

**விஸ்வநாத்** [கணேசன் மயில்வாகனம் - கொட்டடி - யாழ்]

**ராஜ்** (தங்கவேலாயுதம் ஜெயராஜ் - மயிலிட்டி - யாழ்)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. பேராசிரியர் - உடலமைப்பியல்/ நோயியல்/ சட்ட மருத்துவம்/ மனநோயியல்/ மருந்தியல்/ குழந்தை மருத்துவம்/ அறுவை மருத்துவம்.
2. அறக்கொடைத்தவிசு - அங்கக்கோணல் அறுவைமருத்துவம்/ கழலையியல்.
3. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/ விரிவுரையாளர்- உடற்றொழிலியல்/ சமுதாய மருத்துவம்/ உயிரிரசாயனவியல்/ உடலமைப்பியல்/ நோயியல்/ சட்ட மருத்துவம்/ மருந்தியல்/ மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும்/ குழந்தை மருத்துவம்/ அறுவை மருத்துவம்/ நுண்ணுயிரியல்/ ஒட்டுண்ணியியல்
4. தற்காலிக விரிவுரையாளர் - உடற்றொழிலியல்/ சமுதாய மருத்துவம்/ உயிரிரசாயனவியல்/ உடலமைப்பியல்/ நோயியல்/ சட்ட மருத்துவம்/ மருந்தியல்/ மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும்/ குழந்தை மருத்துவம்/ அறுவை மருத்துவம்/ நுண்ணுயிரியல்/ ஒட்டுண்ணியியல்.
5. தற்காலிக செய்முறை காட்டுநர் - உயிரிரசாயனவியல்/ நோயியல்.

### சம்பள அளவுத்திட்டம்

பேராசிரியர்:
ரூபா 15,860 -6x390 - 18,200/-மாதமொன்றிற்கு.

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II:
ரூபா 10,400 - 5x325 - 12 025/-மாதமொன்றிற்கு.

விரிவுரையாளர் (மருத்துவம்):
ரூபா 5850 - 10x260 - 8450/- மாதமொன்றிற்கு. (மருத்துவ பீடத்தின விரிவுரையாளருக்கு முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத்திட்டத்தில் 5850/- ரூபாவுக்கு இரண்டு படி அதிகமாக அதாவது 6,370/- ரூபா சம்பளத்தில் வைக்கப்படல் வேண்டும்.)

தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்):
ரூபா 6,370/- மாதமொன்றிற்கு (நிலையானது)

தற்காலிக செய்முறை காட்டுநர்:
ரூபா 4225/- மாதமொன்றிற்கு (நிலையானது)

### குறிப்பு:-

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 551 ஆம் இலக்க 1992 டிசெம்பர் 28ஆம் தேதிய சுற்று நிருபத்திற்கு ஏற்ப மேற்குறித்த சம்பள அளவுத்திட்டங்கள் 1994 சனவரி 1ஆம் தேதியிலிருந்து முழுமையாகச் செயற்படுத்தப்படும்.
2. இத்துடன் 1994 டிசெம்பர் 31ஆம் தேதி வரை நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும் படியாக மேற்குறித்த சம்பளத்தின் 25 சதவீதம் கொடுப்பனவு செய்யப்படும்.

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவுத்தேதி 1993 11 12. இதர பதவிகளுக்கான விண்ணப்ப முடிவுத் தேதி 1993 09. 24.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் விவரங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துக்கும் நிதிக்கிளையில் 20/- ரூபாவைச் செலுத்திய பின்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

சிவசர்மா மதுநந்தினிபெற்று தங்கப் பதக்கம் பெற்றுள்ளார் (24).

## மரங்களைப் பேண கோரிக்கை

கடந்த காலங்களில் பொது மக்கள் மற்றும்பல்வேறு அமைப்புகளாலும் எமது பிரதேசத்திலே வீதியோர மரநடுகை வதிவிட மரநடுகை, மாவீரர் மரநடுகை, மரநடுகை வாரம், கரும்புலிகள் தின மரநடுகை என பல்வேறு வகையான மரநடுகை நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1992ஆம் ஆண்டிற்கு முன்பிருந்த மனநிலையைவிட மக்கள் மனதில் மரநடுகை தொடர்பாக புதியதோர் விழிப்புணர்ச்சி தோன்றியதன் வெளிப்பாடே பல்லாயிரக்கணக்கான மரங்கள் நடுகை செய்யப்பட்டதும் காப்பாற்றப்பட்டதுமாகும் என மரங்களை வரட்சியின் அழிவிலிருந்து காப்பது தொடர்பாக விவசாய சூழல் பாதுகாப்புப்பகுதியினர்வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

எமது பிரதேசத்தில் தற்போது நிலவுகின்ற கடும்வரட்சியினால், தழைத்து நிற்கும் மரங்கள் எல்லாம் தொடர்ந்து நின்று எமது சூழலைப் பாதுகாக்குமா என்பது கேள்விக்குறியாகவே மாறியுள்ளது.

## வருடாந்த உற்சவம்

(கொழும்புத்துறை)

யாழ்-குருநகர் புனித ஆரோக்கிய நாதர் வருடாந்த உற்சவம் கடந்த 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 00 மணிக்கு வணக்கத்துக்குரிய அன்ரன் ராசநாயகம் அவர்களால் கொடியேற்றப்பட்டு ஆராதனையும், திருப்பலியும் ஆரம்பமாகி தொடர்ந்து ஐந்து நாட்கள் நடைபெறும். [24]

★

(குருநகர்)

அளவெட்டி தெற்கு- நாகேஸ்வரம் சிறீ நாகவரத நாராயணர் தேவஸ்தான மகோற்சவம் இம்மாதம் 30ஆம் திகதி திங்கட்கிழமைபகல் 11.30 மணிக்கு நடைபெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். [21]

★

[கொழும்புத்துறை]

மிருசுவில்- கெற்பெலியில் அமைந்திருக்கும் அருள்மிகு ஸ்ரீபார்வதி சமேதராகிய பரமசிவன் ஆலயத்தில் இன்று காலை 8.00 மணியளவில் சிவயாக பூசை நடைபெறவுள்ளது. ஆலய கும்பாபிஷேக ஆண்டு நிறைவையும், நாட்டின் நன்மையையும் கருதி இடம்பெறும். இவ் யாகபூசை பிரம்மஸ்ரீ மு. சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் பகல் அன்னதானமும் பிற்பகல் வில்லிசை நிகழ்ச்சியும் இடம்பெறும். [24]

(நியூ பாக்கியம் கிளினிக் - பரந்தன்)

பிரபல ஆயுர்வேத வைத்தியர் (Doctor), சந்தர்மடத்தை பிறப்பிடமாகவும் பரந்தனை வசிப்பிடமாகவும் கொண்டவர்

| உதயம் | அஸ்தமனம் |
|---|---|
| 14-12-1953 | 26-07-1993 |


அன்பின் திருவுருவாய் பாசத்தின் ஒளி விளக்காய் இருந்து திடீரென எம்மை ஆறாத் துயரில் மூழ்க வைத்து மீளாத் துயில் கொண்ட எம் அன்பு தெய்வமே எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்கே உங்கள் ஆத்மா சாந்தி அடைய கண்ணீர் பூக்களால் அர்ச்சிக்கின்றோம்

திருமதி நவரட்ணம் நல்லநாயகி
17/1, பிறவுண் வீதி,
2 ம் ஒழுங்கை,
சந்தர்மடம்
யாழ்ப்பாணம்.

தாய், மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், சகோதரிகள் அண்ணி, மைத்துனர்கள், பெறாமக்கள், மருமக்கள், சிறியதாய், மாமா, உறவினர் நண்பர்கள்.

(சி-7255)

## 3 ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 1962.02.15

வீரச்சாவு: 1990.08.25

## நடிகன் ராஜீவ்காந்தி

[நடராசா திருஞானமூர்த்தி]

மருதங்கேணி மண்தனிலே முதன் முதலில் புலிக்குச் சென்றாய்
மற்றவரும் சேர்வதற்கு மகிழ்ச்சியுடன் வழிவகுத்தாய்
அன்னியரை அழிப்பதற்கு அலையாய் நீ எழுந்தாய்
அடங்காத தமிழர் என்று நடுங்காமல் நீ நடந்தாய்
புல்லர்களை அழிப்பதற்கு புதுவடிவம் நீ எடுத்தாய்
புலிகளுடன் பாசறையில் புகழுடனே நீ வளர்ந்தாய்
தாயகத்தை மீட்கும் பணியைத் தலைமேலே சுமந்து கொண்டாய்
தலைவருடைய வழி தனிலே தலை நிமிர்ந்து நீயும் சென்றாய்
வன்னியிலே வஞ்சகர்கள் வந்தார் என்று நீ அறிந்தாய்
வளமுடனே போர் தொடுத்து களமும் பல வென்று வந்தாய்
தீவகத்தில் ஆமி என்று திடுக்கிடும் செய்தி கேட்டாய்
துரத்திட வேண்டும் என்று சினங்கொண்டு போர் தொடுத்தாய்
மருதங்கேணி மண்தனிலே மழலையாக நீ தவழ்ந்தாய்
மண்டைதீவில் சண்டையிட்டு மாவீரன் ஆகிவிட்டாய்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 38 வீர வேங்கைகளையும் இந் நாளில் நினைவு கூருகின்றோம்

மருதங்கேணி வடக்கு. - குடும்பத்தினர்

(5740)

ஜொனி [பீற்றர் சிங்கம் - 29, செட்டிகுளம் - வவுனியா]
உதயகுமார் [குமாரசாமி மகேந்திரகுமார் - நெளுக்குளம் - வவுனியா]
கேதீஸ் [பாலகிருஷ்ணன் சந்திரகாந்தன் - 179, சிவசுந்தரம் வீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி]
சசி [ஜெகநாதன் ஜெயசீலன் - 3-ம் கட்டைச்சந்தி முரசுமோட்டை - கிளிநொச்சி]
வதனன் [பொன்னுத்துரை இந்திரஜித் - 209, இந்திரஜித் வீதி, வட்டக்கச்சி - கிளிநொச்சி]
பரணி [ம. சந்திரராஸ் - மன்னார்]
கருணா [சேது பூபாலசிங்கம் - புளியங்குளம், அடம்பன் மன்னார்]
கிருபாகரன் [பெரியகறுப்பன் காளிமுத்து, உடையார் வேலித்தோட்டம் - மலையகம்]
தர்சன்/நந்தன் [ஜோசப் அலெக்ஸாண்டர் - ஏயாப் போஸ்ட் - மலையகம்]
கருணாநிதி [சர்வகுலராசா சிவரூபன் - சித்தன்கேணி - யாழ்]
விஸ்வநாத் [கணேசன் மயில்வாகனம் - கொட்டடி - யாழ்]
ராஜ் (தங்கவேலாயுதம் ஜெயராஜ் - மயிலிட்டி - யாழ்)
பைரவன் (விசுவலிங்கம் விமலகுமார் - சுழாவடி, ஆனைக்கோட்டை - யாழ்)
சூட்டி (கணபதிப்பிள்ளை யோகேந்திரராஜா - கொடிகாமம் - யாழ்)
நடிகன்/ராஜீவ்காந்தி (நடராசா திருஞானமூர்த்தி - தாளையடி - யாழ்)
ரவிசங்கர் ( — — யாழ்ப்பாணம்)
சுபாஸ் (குலசிங்கம் விஜயராசன் - 4-ம் வட்டாரம் வேலணைகிழக்கு)
வேல்ராஜ் (சிவராசா சுதாகிருஷ்ணா - கலட்டி - யாழ்)
உதயவர்மன் (நடராசா ஜெயானந்தம் - மல்லாகம் மதிதி - யாழ்)
ரமேஸ் [அட்சரலிங்கம் சந்தானலிங்கம் - கச்சாய்தெற்கு- கொடிகாமம்]
சின்னப்பதாஸ் (திசைவீரசிங்கம் லெட்சுமணானன் - 10-ம் வட்டாரம் - புங்குடுதீவு)
ஈஸ்வரன் (பாலகிருஷ்ணன் ஈஸ்வரன் (அப்பன்) - புளியங்கூடல் - ஊர்காவற்றுறை)
எட்றிச் (ஆசீர்வாதம் எஸ்ரீபன் அனுராஜா - 4-ம் வட்டாரம் - புங்குடுதீவு)
மணியரசன் (ஜோசப் ஈழநேசன் - நாரந்தனை - ஊர்காவற்றுறை)
கங்கை (அத்தனாஸ் அப்புலோனியஸ் - 10-ம் வட்டாரம் - புங்குடுதீவு)
நிதர்சன் (சின்னத்தம்பி சந்திரகுமார் - புலோலிதெற்கு - யாழ்)
உஷா (சுபதி பாலசுந்தரம் - சங்கானை மேற்கு, பண்டத்தரிப்பு - யாழ்)
மகிந்தன் (கார்த்திகேசு ஏகாம்பரம் - சிறுப்பிட்டிதெற்கு, நீர்வேலி - யாழ்)
கோணேஸ் ( — — — )
சக்கரவர்த்தி ( — — — )

காங்கேசன்துறையில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -
மயூரன்/அப்பன் (சிவலிங்கம் மயூரன் - பிரதான வீதி, அளவெட்டி - யாழ்)

அம்பாறையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நொச்சிமுனை - பழையகல்முனை வீதியைச் சேர்ந்த தமிழ்ப்பொதுமகன்.

மட்டுநகரில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின்போது படுகொலை செய்யப்பட்ட கூலித் தொழிலாளியான வந்தாறுமூலையைச் சேர்ந்த இளைஞன், மாணவி, வீட்டுவேலை செய்யும் பெண், செங்கலடி - 02ஐச் சேர்ந்த பெண் விவசாயி, கூலித் தொழிலாளி, கொடுவாமடுவைச் சேர்ந்த 02 கூலித் தொழிலாளர்கள், ஏறாவூர் ஐயங்கேணியைச் சேர்ந்த கூலித் தொழிலாளி, கொம்மாந்துறையைச் சேர்ந்த வியாபாரி, புகைப்பட நிலைய ஊழியர் உட்பட 12 தமிழர்கள். களுவாஞ்சிக்குடி இராணுவத்தினரால் பெரியகல்லாறு ஒந்தாச்சிமடம், கோட்டக்கல்லாறுப் பகுதிகளில் சுட்டுக் கொல்லப்பட்ட 13 தமிழர்கள்.

ஊர்காவற்றுறையிலிருந்து அராலிச்சந்தியை நோக்கி முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டிலும், மற்றும் தரை கடல் பகுதிகளில் நடாத்தப்பட்ட தாக்குதல்களிலும் கொல்லப்பட்ட பல தமிழர்கள். மண்டைதீவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 02 சிறுமிகள் உட்பட சரவணை, மயிலப்புலம், பள்ளப்புலம், சோளாவத்தை பகுதிகளிலும் படுகொலை செய்யப்பட்ட பெருந் தொகையான தமிழர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறியிடப்பட்ட மாவீரர் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவார்.

### தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி-7254)

ரூபா 4225/- மாதமொன்றிற்கு (நிலையானது)

குறிப்பு:-

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் 551 ஆம் இலக்க 1992 டிசெம்பர் 28ஆம் தேதிய சுற்று நிருபத்திற்கு ஏற்ப மேற்குறித்த சம்பள அளவுத்திட்டங்கள் 1994 சனவரி 1ஆம் தேதியிலிருந்து முழுமையாகச் செயற்படுத்தப்படும்.
2. இத்துடன் 1994 டிசெம்பர் 31ஆம் தேதி வரை நிலுவையிலுள்ள வேலைகளை நிறைவேற்றும் படியாக மேற்குறித்த சம்பளத்தின் 25 சதவீதம் கொடுப்பனவு செய்யப்படும்.

பேராசிரியர் பதவிக்கான விண்ணப்ப முடிவுத்தேதி 1993 11 12. இதர பதவிகளுக்கான விண்ணப்ப முடிவுத் தேதி 1993 09. 24.

மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் விவரங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்துக்கும் நிதிக்கிளையில் 20/- ரூபாவைச் செலுத்திய பின்னர் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் / நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா பெறுமதியான காசுக்கட்டளை/தபாற்கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23x10 ச.மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் அபேட்சகரின் சிறப்புத் தகைமைகளையும் அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு அவர் சம்பள அளவுத்திட்டத்தில் பொருத்தமானபடியில் வைக்கப்படுவர்.

குறிப்பு:- ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993. 08. 19. [சி-7558]

# இதயபூமி 1

# வெற்றி நாள் சிறப்பிதழ்

மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட இதய பூமி 1 தாக்குதல் நடவடிக்கையின் போது கிடைத்த வெற்றியானது சிறிலங்கா இராணுவ, அரசியல் மற்றும் பேரினவாதப் பத்திரிகைகளைப் பெரும் கொதிப்பிற்கு உள்ளாக்கியுள்ளது. இத்தோல்வியை சொல்லவும் முடியாமல், மெல்லவும் முடியாமல் சிறிலங்கா அரசாங்கமும், இராணுவத் தரப்பும் தவித்துப போயுள்ளன.


''இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக நீடித்து வரும் ஈழப்போரில், இதுவரை காணாத மிகப் பெரும் வெற்றியை மிகக் குறுகிய காலப் பகுதியான மூன்று மணி நேரத்திற்குக் குறைவான தாக்குதலில், அவர்கள் - விடுதலைப் புலிகள் - பெற்றுவிட்டனர். இத தாக்குதலில் ஓர் இராணுவ முகாம் அழிக்கப்படடதலல. புலிகளிடம் 50 மில்லியன் ரூபாவிற்கும் அதிகமான பெறுமதி வாய்ந்த இராணுவ உபகரணங்களும் போய்ச சேர்ந்து விடடன.''

''சிறிலங்கா இராணுவம் தனது முகாம்களைய பாதுகாகக முடியாமல் திணறுகின்றது. கொக்காவில், மாங்குளம், கோட்டை, வெற்றிலைக்கேணி வரிசையில் ஜனகபுர - மண்கிண்டிமலை மற்றுமொரு உதாரணம்.''

''எமது பாதுகாப்பிற்கு நிதி ஒதுக்கீடு செயயும்போது எம்மையும் அறியாமலே எதிரிகளின ஆற்றலுக்கும் பலம் சேர்க்கவும உதவுகிறோம்.''

''புலிகள் பலவீனமுற்றுள்ளனர். இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் புலிகள் பலவீனப்பட்டிருப்பதாலேயே போர்க் கைதிகள் உண்ணாவிரதம் என்ற நாடகத்தை ஆரமபித்தனர் என்றெல்லாம் வெளியிடப்பட்ட கணிப்புக்களை இம்முகாம் மீதான தாக்குதலகள் பொய்யானது என நிருபிதது விட்டன.''

இவ்வாறாகத் தோல்வி குறித்த ஆதங்கத்தையும், அதிருப்தியையும் 'சண்டே ரைம்ஸ்' வெளியிட்டது என்றால் 'ஐலண்ட்' பத்



தாக்குதல் குறித்து தளபதிகள் விளக்குகின்றனர்

கர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா தமது தோல்விக்கு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

''ஆபத்திற்குள்ளாகக் கூடியவை எனக் கருதப்பட்ட இரண்டு பாதைகளிலும் பாதுகாப்பு பலப்படுத்தபபட்டதுடன் சந்தேகமளிக்காத மூன்றாவது பாதையில் ஊர்காவற் படையினர் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். ஆனால், இம்மூன்றாவது பாதை வழியாகவே புலிகள் புகுந்து தாக்குதல் நடத்தினர்'' எனத் தோல்விக்குக் காரணம் தேடினார் ஓர் இராணுவ அதிகாரி.

முகமாகக் குற்றம் சாட்டினார்.

இராணுவத் தளபதியோ ''இராணுவத்தின் போர் மூலோபாயத்தை வகுப்பதிலோ அல்லதுபடைநகர்வுகளை தீர்மானிப்பதிலோ எனக்கு எந்தவித அதிகாரமும் இப்போது இல்லை. அவற்றிற்குக் கூட்டுப்படைத் தலைமையகமே பொறுப்பு'' எனத் தெரிவித்ததோடு, ''இராணுவம் நடவடிக்கையின் போது தோல்வியைச் சந்தித்தால் இதற்கு இராணுவமே பொறுப்பு எனத தெரிவிக்கப்படுகின்றது. இராணுவம் வெற்றி

டார்.

★

இவ்வாறாக இராணுவம், தனது தோல்வியை ஏற்றுக் கொண்டுள்ளதோடு, தோல்விக்கான காரணங்களை மற்றவர் மீது சுமததுவதிலும், காரணம் தேடுவதிலும் ஈடுபட்டு உள்ள அதேவேளை அரசாங்க தலைமைப் பீடமும் எதிர்க்கட்சியினரும் கொதித்துப் போயுள்ளனர். தோல்விக்கு இராணுவத் தலைமை மீது குறைகூறவும் முற்பட்டனர்.

மண்கிண்டிமலை இராணுவ முகாம் வீழ்ச்சியின் பின் கூட்டப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் மாநாட்டில் கோபம் கொண்டவராகக் காணப்பட்ட ஜனாதிபதியும் முப்படைகளின் தளபதியுமான டி.பி. விஜேதுங்கா, ''உயர் அதிகாரிகள் தமது பணியை சரியாகச் செய்யவேண்டும். அல்லது அதற்கான பிரதி பலனை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என அதிகாரிகளை எச்சரித்தார் மேலும்'' படையினர் இரவில் தூங்கி பகலில் ரோந்து செல்வதை விடுத்து பகலில் உறங்கி இரவில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்

**உயர் அதிகாரிகள் தமது பணியை சரியாக செய்ய வேண்டும அலலது அதற்கான பிரதிபலனை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் படையினா இரவில் உறங்கி பகலில் ரோந்து செலவதற்குப் பதிலாக பகலில் உறங்கி இரவில பாதுகாப்பு நடவடிககைகளை மேற்கொளளட்டும்.**

**ஜனாதிபதி டி.பி. விஜயதுங்க**

''புலிகள் முகாமை தாக்குவதற்கு முன்பாகவே சாதாரண வியாபாரிகள் போன்று இம்முகாமிற்கு வந்து சென்றனர். இதுவே அவர்கள் தாக்குதல் நடைபெற்றுக் கொண்

பெறும்போது அதற்கான பாராட்டை கூட்டுபபடை நடவடிக்கைத் தலைமையகம் பெற்றுக்கொள்கின்றது'' என ஜெனரல் ஹமில்டனை நேரடியாகச் சாடினார்.

வேண்டும் என்ற ஆர்வம் அரசிற்கு இல்லை'' என சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி. யான அனில் முனசிங்கா குற்றம் சாட்டினார். அக்கட்சியின் தலைவி சிறிமாவோபண்டார நாயக்கா ''அரசாங்கம் தனது சகல நடவடிக்கைகளையும் நிறுத்திக் கொண்டு உடனடியாக நாடு முழுவதும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும'' எனக் கோரிக்கை விடுத்தார்.

இவ்வாறாக அரசியற் தரப்பு இராணுவத்தின் மீதும் அரசியல்வாதிகள் தமக்குள்ளும் குற்றச் சாட்டுக்களை சுமததிவரும் இதேவேளை இராணுவத் தரப்பும் அரசின் மீதும் அரசியல் வாதிகள் மீதும் குற்றங்களைச் சுமத்தாமல் இல்லை. மண்கிண்டிமலை இராணுவ முகாம் தோல்வியின் காரணமாக வெறுப்பின் விளிம்பிற்கே சென்றுள்ள இராணுவத்தின் கனிஷ்டநிலை அதிகாரியின் கோபத்தின் உச்சிக்கே சென்றுள்ளனர். மறைமுகமாக அரசாங்கத்தையும் விமரிசிப்பவர்களையும் சாடிய அதிகாரி ஒருவர் 'வெற்றிக்காக தொடர்ந்து போராட விரும்புகிறோம். ஆனால், நாய்களைப் போல்

கொல்லப்பட்டனர். பல ஆயிரம் பேர் காயமடைந்தனர். பல ஆயிரம் பேர் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி இராணுவத்தை விட்டே ஓடினர்.

தலைவர் பிரபாகரன் வகுத்துக் கொடுத்த இப்போர் முறைத்திட்டமானது உலகில், எந்த கெரில்லா இயக்கமும் பின்பற்றாத, சிறப்பு மிக்கதாக இருந்தது. சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் கூட இத்

படிப்படியாக தர்க்கபூர்வ வளர்ச்சி கண்டு தொடர் காவலரண்கள் அவற்றுடன்கூடிய மினி முகாம்'கள் என்பனவற்றை அதிரடி மூலம் நிர்மூலமாக்கும் போர் முறைத் திட்டமாக வளர்ச்சி கண்டு. தற்பொழுது, இராணுவ முகாம்களையே மின்னல்வேக அதிரடியில் தகர்க்கக் கூடியதாக தர்க்கபூர்வ வளர்ச்சி கண்டுள்ளது. இந்த வரிசையில் கடந்த வருடம்

**சாதாரண ராணுவத்தினர் மத்தியில் இத் தாக்குதல் ஓர் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது- கனிஷ்ட அதிகாரிகள் மத்தியில் கோபத்தைக் கிளப்பியிருக்கிறது ''வெற்றிக்காக தொடர்ந்து போரிட விரும்புகிறோம், ஆனால் நாய்களைப்போல சாவதற்காக அல்ல'' என்கின்றனர் அவர்கள்.**


**-சண்டே ரைம்ஸ்**

தாக்குதல் முறையைக் கண்டு வியந்தனர். தலைவர் பிரபாகரன் வகுத்துக் கொண்ட இப்போர்முறை திட்டமானது எதிரியின் நடவடிக்கையை நீண்டகாலம் அவதானிப்பதன் அடிப்படையில் அவனது பலத்தையும் பலவீனத்தையும் நன்கு சரியாகக் கணிப்பீடு செய்து நுட்பமாகத் தயாரிக்கப்படுவ

யூலையில் இடம்பெற்ற வண்ணான்குளம் இராணுவமுகாம் தகர்ப்பு, ஒக்டோபரில் இடம்

-ஜெயராஜ்

பெற்ற கட்டைக்காட்டு மினி முகாம், இராணுவ வேலி தகர்ப்பு, இவ்வருடம் மலையில் இடம்பெற்ற மண்கிண்டி



புலிகளால் கைப்பற்றப்பட்ட சில ஆயுதங்கள்

மொரு உதாரணம்.''

''எமது பாதுகாப்பிற்கு நிதி ஒதுக்கீடு செயயும்போது எம்மையும் அறியாமலே எதிரிகளின ஆற்றலுக்கும் பலம் சேர்க்கவும உதவுகிறோம்.''

''புலிகள் பலவீனமுற்றுள்ளனர். இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் புலிகள் பலவீனப்பட்டிருப்பதாலேயே போர்க் கைதிகள் உண்ணாவிரதம் என்ற நாடகத்தை ஆரமபித்தனர் என்றெல்லாம் வெளியிடப்பட்ட கணிப்புக்களை இம்முகாம் மீதான தாக்குதலகள் பொய்யானது என நிருபிதது விட்டன.''

இவ்வாறாகத் தோல்வி குறித்த ஆதங்கத்தையும், அதிருபதியையும் 'சண்டே ரைம்ஸ்' வெளியிட்டது என்றால் 'ஐலண்ட்' பத்திரிகையோ ''ஜனகபுர-மண்கிண்டிமலை-இராணுவமுகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய வெற்றிகரமான தாக்குதல இராணுவ பாதுகாப்பு முழுவதையும அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. புலிகளை வெற்றிகொள்ளும மனததிடம் அரசிற்கு இலலை என்பதையே இச்சமபவம் காட்டுகின்றது. பலத்த நாசத்தை ஏற்படுத்தியுள்ள இத்தாக்குதலானது அரசிற்கு ஓர் எச்சரிக்கையாகும்'' என அரசாங்கத்தையும் இராணுவத்தையும் எச்சரிக்கை செய்துள்ளது.

இதேவேளை இப்பத்திரிகைகள் இராணுவத்தின் தோல்விகளைப பறைசாற்றும் வண்ணம் அழிக்கப்பட்ட மண்கிண்டிமலை இராணுவ முகாமின் புகைப்படங்களையும் பெரியளவில் வெளியிட்டன. பேரினவாதப் பத்திரிகைகளே இவ்இராணுவத் தோலவியைப் பறைசாற்றிய விதமானது சிறிலங்காப் பிரதமர் ரணில் விககிரமசிங்கா ''இராணுவ இரகசியங்களை பத்திரிகைகள் வெளியிடுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும'' எனக் கோரிக்கை விடும் அளவில் கொண்டு வந்து நிறுத்தியது.

★

இராணுவத் தோல்வியைப் டேரினவாதப பத்திரிகைகள் இவ்வாறு ஆதங்கத்துடனும், வெறுப்புடனும் வெளிப்படுத்திய வேளை சிறிலங்கா இராணுவ தரப்போ தோல்வியை ஏறறுக் கொள்ள வேண்டிய துப்பாக்கிய நிலையில் இருந்தது.

''மண்கிண்டிமலை இராணுவ முகாம் மீதான புலிகளின் தாக்குதல் இராணுவத்திற்கு ஒரு பேரிழப்பாகும். இரு கமாண்டோப் பிரிவுகள் மறறும் ஒரு கனரக ஆயுதப் பிரிவு இருந்தும் இழப்பைத் தடுகக முடியாமல் போய்விட்டது. சண்டை இடம்பெற முன்பே முகாம் புலிகளால் சூறையாடபபட்டு விட்டது', என கூட்டுப்படை நடவடிக்கைத்தலைமையகத்தின் தள... யினர் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். ஆனால், இம்மூன்றாவது பாதை வழியாகவே புலிகள் புகுந்து தாக்குதல் நடத்தினர்'' எனத் தோல்விக்குக் காரணம் தேடினார் ஓர் இராணுவ அதிகாரி.




''புலிகள் முகாமை தாக்குவதற்கு முன்பாகவே சாதாரண வியாபாரிகள் போன்று இம்முகாமிற்கு வந்து சென்றனர். இதுவே அவர்கள் தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது இராணுவத் தொலைதொடர்புக் கட்டுப்பாட்டு அறைக்குள் உடனடியாகவே புகுந்து அதனைச் செயலிழக்கச் செய்ய வழிவகுத்தது'' என ஜனாதிபதி தலைமையில் இடம்பெறற பாது... பெறும்போது அதற்கான பாராட்டை கூட்டுபபடை நடவடிக்கைத் தலைமையகம் பெற்றுக்கொள்கின்றது'' என ஜெனரல் ஹமில்டனை நேரடியாகச் சாடினார்.

இராணுவ அதிகாரிகள் இவ்வாறு மோதிக் கொண்டதோடு, குடியேற்றவாசிகள் மீது இராணுவ அதிகாரிகள் குற்றம சாட்டத் தவறவிலலை. மண்கிண்டி மலையிலிருந்து வெளியேறிய சிங்கள குடியேற்ற வாசிகளின் முகாம்களுக்கு அமைச்சர்கள் விஜயம் செய்தபோது அவர்களுடன் சென்றிருந்த இராணுவ அதிகாரி பாரிலியினகே ''சிங்கள குடிமக்கள் தகவல்களை வழங்குவதில் இராணுவத்திற்கு ஒத்துழைப்பு தருவதில்லை'' எனக் குறைப்பட்டுக் கொண்...கமே பொறுப்பு'' எனத் தெரிவித்ததோடு, ''இராணுவம் நடவடிக்கையின் போது தோல்வியைச் சந்தித்தால் இதற்கு இராணுவமே பொறுப்பு எனத தெரிவிக்கப்படுகின்றது. இராணுவம் வெற்றி...

...எதிர்க்கட்சியினரும் கொதித்துப் போயுள்ளனர். தோல்விக்கு இராணுவத் தலைமை மீது குறைகூறவும் முற்பட்டனர்.

மண்கிண்டிமலை இராணுவ முகாம் வீழ்ச்சியின் பின் கூட்டப்பட்ட பாதுகாப்பு அதிகாரிகள் மாநாட்டில் கோபம் கொண்டவராகக் காணப்பட்ட ஜனாதிபதியும் முப்படைகளின்தளபதியுமான டி. பி. விஜேதுங்கா, ''உயர் அதிகாரிகள் தமது பணியை சரியாகச் செய்யவேண்டும். அல்லது அதற்கான பிரதிபலனை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என அதிகாரிகளை எச்சரித்தார் மேலும்'' படையினர் இரவில் தூங்கி பகலில் ரோந்து செல்வதை விடுத்து பகலில் உறங்கி இரவில் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ள வேண்டும்'' எனவும் தெரிவித்தார்.

அரசாங்க தரப்பு இராணுவ தலைமைப் பீடத்தில் இவ்வாறு எரிந்து விழுந்த வேளையில் எதிர்க்கட்சியினரோ அரசாங்கத்தின் மீது தமது குற்றச் சாட்டை வீசத்தவற...



புலிகளால் கைப்பற்றப்பட்ட சில ஆயுதங்கள்



தாக்குதலுக்குத் தயாராகும் பெண் போராளிகள்

காப்பு மாநாட்டில் இராணுவ அதிகாரி ஒருவர் விளக்கம் கூற முயன்றார்.

இதேவேளை, தோல்விக்கான காரணங்களை மற்றவர்கள் மீது சுமத்தி விடுவதிலும் இராணுவத் தரப்பு தமக்குள்ளும் வெளியிலும் முரண்பட்டுக் கொண்டது. ''ஜனகபுர'' இராணுவ முகாம் சரியான முறையில் அமைக்கப்படவில்லை. வெளிப் பாதுகாப்பு முன்னணி எல்லைகள் சரியாக நிர்மாணிக்கப்படவில்லை'' எனக் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமையகத் தலைவர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சிசில் வைத்தியரெட்னாவை மறை...



...வில்லை. ''ஜனகபுரமோதலில் பாதுகாப்பு படையினர் படுதோல்விகளைக்கண்டுள்ளனர். இந்த நிலையில் அரசாங்கம் ராஜினாமாசெய்திருக்க வேண்டும். குறைந்தது பாதுகாப்புக்கு பொறுப்பான அமைச்சராவது ராஜினாமாச் செய்திருக்க வேண்டும். யுத்தத்தில் வெல்ல... சாவதற்காக' அல்ல எனத் தெரிவித்தார்.

★

இவ்வாறாக சிங்களப்பேரினவாதத்தின் சகல தரப்பினரையும் கலங்கடித்து விட்ட மண்கிண்டிமலை இராணுவமுகாம் தகர்ப்பானது, தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் 1991ஆம் ஆண்டின் இறுதியில் வகுத்துக் கொண்டபோர் தந்திரோபாயத்திற்கும், விடுதலைப் புலிவீரர்களின் திறமைக்கும், துணிவிற்கும் கிடைத்த வெற்றி என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.

இராணுவமுகாங்களை அதிரடி நடவடிக்கை மூலம் தாக்கி அழிக்கும் விடுதலைப் புலிகளின் இப் போர்த்தந்திரோபாயமானது, 1991 ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் தலைவர் பிரபாகரன் வகுத்தபோர் முறைத்திட்டத்தின் தர்க்கபூர்வமான வளர்ச்சியாகும். இப்போர் முறையானது கெரில்லாப் போர் முறையின் உயர் நிலைவடிவத்தைக் குறிக்கும்.

1991ஆம் ஆண்டு ஆனையிறவுப் பெரும் சமரிலும், மணலாற்றுப் போரிலும் ஏற்பட்ட அனுபவங்களைக் கொண்டு வகுக்கப்பட்ட புதிய போர் முறைத் திட்டமானது இராணுவத்திற்கு பெரும் பின்னடைவுகளையும், இழப்புக்களையும் ஏற்படுத்துவதாக அமைந்தது.

புதிய இப்போர்முறைதிட்டமானது வேகம், துணிவு என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டது. இதனால் பல மின்னல் வேக அதிரடிகளுக்குஇத்திட்டம்வழி வகுத்தது. பலஇராணுவஅணிகள் முற்றாக அழிக்கப்படுவதற்கும், காவல் அரண்கள் நிர்மூலமாவதற்கும், முகாம்கள் தகர்க்கப்படுவதற்கும் வழி சமைத்தது.

இத்தாக்குதல் திட்டத்தினால், 1992இல் சிறிலங்கா இராணுவம் பெரும் உயிர், தளபாட இழப்புக்களை சந்திக்க வேண்டி வந்தது. பல ஆயிரம் இராணுவத்தினர் ...தாக இருந்தது.

இப்புதிய போர் முறைத் திட்டம் முதலில் ரோந்துஅணிகள் மீதும் காவலரண்கள் மீதும் மின்னல் வேக அதிரடிகளாக பிரயோகிக்கப்பட்டது. இத்திட்டம் பின்னர் ...மலை இராணுவ முகாம் தகர்ப்பு என்பன நீண்டு வருகின்றது.

இம்மூன்று தாக்குதல்களும்' சிறிலங்கா இராணுவத்திற்கு பெரும் இராணுவத் தோல்வி

( 5 ஆம் பக்கம் பார்க்க)

## பெறுமதிமிக்க ஆயுதங்களை ராணுவம் பறிகொடுத்தது

| | | |
|---|---|---|
| ஆர். பி. ஜி. | — | 07 |
| 81 மி. மீ மோட்டார் | — | 01 |
| 60 மி. மீ மோட்டார் | — | 05 |
| 203 கைத்துப்பாக்கி (டொங்கான்) | — | 04 |
| ஆர். பி. ஜி எறிகணை மனிதஎதிர்ப்பு | — | 44 |
| ஆர். பி. ஜி. எறிகணை டாங்கிஎதிர்ப்பு | — | 76 |
| 60 மி. மீ எறிகணை | — | 231 |
| 60 மி மீ எறிகணை வெளிச்சக்குண்டு | — | 26 |
| 81 மி மீ எறிகணை | — | 22 |
| 81 மி மீ எறிகணை வெளிச்சக்குண்டு | — | 22 |
| 81 மி மீ இன் சென்றி (எரிஷெல்) | — | 02 |
| 40 மி மீ எறிகணை | — | 20 |
| ரி- 56 - 2 ரக துப்பாக்கிகள் | — | 65 |
| ரி- 56 - 1 ரக துப்பாக்கிகள் | — | 52 |
| ரி- 56 புதிய ரக துப்பாக்கிகள் | — | 02 |
| ரி- 81 ரக துப்பாக்கிகள் | — | 13 |
| 303 ரக துப்பாக்கிகள் | — | 24 |
| ஏ. கே. எல். எம். ஜி ரக துப்பாக்கிகள் | — | 07 |
| பி. கே. எல். எம் ஜி ரக துப்பாக்கி | — | 01 |
| வேட்டைத் துப்பாக்கி | — | 11 |
| றிப்பீற்றர் | — | 01 |
| 50 கலிபர் ரவைகள் | — | 657 |
| ஜி பி. எம். ஜி. ரவைகள் லிங்குடன் | — | 7585 |
| ஏ.கே.எல் எம ஜி. ரவைகள் லிங்குடன் | — | 2394 |
| நடுத்தர ரவைகள் | — | 50,349 |
| பி. கே. எல். எம். ஜி. ரவைகள் | — | 2102 |
| 303 ரவைகள் | — | 1517 |
| காட்ரஜ் | — | 250 |
| நடுத்தர காஸ் ரவைகள் | — | 23 |
| ஜே. ஆர். ரக கைக்குண்டு | — | 154 |
| எம் 73 ரக கைக்குண்டு | — | 71 |
| எம். 75 ரக கைக்குண்டு | — | 166 |
| பெரிய ஜே ஆர். கைக்குண்டு | — | 01 |
| ரி. என். ரி. கைக்குண்டு | — | 03 |
| ஸி. பி. கிளைமோர் சிறிது | — | 07 |
| வாகனக் கண்ணிகள் | — | 10 |
| கான் எக்ஸ்புளோடர் | — | 10 |
| டப்பி மிதி வெடிகள் | — | 98 |
| டப்பி 2 2 ரக மிதி வெடிகள் | — | 85 |
| இரவு பார்வை காட்டிகள் | — | 02 |
| ஆர் பி. ஜ. தொலை நோக்கிகள் | — | 08 |
| 60 மி மீ தொலைநோக்கிகள் | — | 04 |
| 60 மி. மீ புரொஜெக்ரர் | — | 04 |
| தொலைநோக்கிகள் | — | 04 |
| குண்டு துளைக்காத கவசம் | — | 58 |

# இதயபூமி I வெற்றிநாள் சிறப்பிதழ்

மண்கிண்டிமலை!
இடத்தின் பெயராகத்தான் இதுவரை இருந்தது.

தமிழர் தாயகத்தில் தனது முகாம்களை தக்க வைத்துக் கொள்ளவே சிறிலங்கா இராணுவம் திக்கு முக்காடுகிறது என்பதை உலகுக்கு உணர்த்திடும் மற்றொரு பெயராக இப்போது அது மாற்றம் கண்டுள்ளது.

கொண்டச்சி தொட்டு கொக்காவில், கோட்டை, மாங்குளம் என்று அந்நியப்படைகளை அடித்து விரட்டிய ஊர்களின் வரிசையில் இப்போது மண்கிண்டிமலையும் இணைந்து கொண்டது.

பத்தாண்டுகளுக்கு முன்பு படுகொலை நடந்தது. எதிசுகிலும் உணரப்பட்டது. ஆனால் அத்தனை துயரையும் இதயத்தில் தேக்கி புலியென நிமிர்ந்தவர் மட்டும் தான் அந்த இருண்ட நாட்களின் நினைவுகள் தீயென கனன்று கொண்டிருக்கிறது என்பதை முரசறைந்து சொன்னது மணகிண்டிமலை.

இமாலயச் சிகரத்திலும் மலைக்காடுகளிலும் சந்தோஷமாய் சஞ்சரித்த கூர்க்கா படைகள் சங்கடப்பட நேர்ந்தது இங்குதான். நேற்றுப் போல அந்த நினைவுகள். உயிருக்கு அஞ்சி கத்தியைப் புதைத்த இநதியச் சிபாய்களின் கதைகளை மறந்து போய் சிங்களச் சிங்கங்கள் சீறிக் கொண்ட போதும் அசைந்து கொடுக்காத உறுதியின் உறைவிடமாய் எழுந்து நிற்கும் பூமி அது.

கிராம வாசிகளுக்கு பாதுகாப்பளிப்பது இராணுவத்தின் கடமை என்பது உலக நியதி. என்ன அதிசயம்! இங்கோ இராணுவத்தின் பாதுகாப்பை உறுதிபபடுததவே குடியிருப்புகள் மண்கிண்டிமலை என்பது பண்டைத் தமிழ்ப் பெயர்.

வாவியில் இறால் பிடித்தும்- காடுகளில் தேன் எடுத்தும்- பசுப்பாலும், எருமைப்பாலும் பருகி மகிழ்ந்தும் இயற்கையோடு ஒன்றி வாழ்க்கை நடத்திய அப்பாவிக் கிராம மக்கள் தமிழர் என்ற ஒரேயொரு காரணத்துக்காக தமது இருப்பிடம் துறக்க நேர்ந்தது. உடும்பு வேட்டைக்காகப் பழக்கப்பட்ட அக்கிராமத்து நாய்கள் கூட தமிழர் வீடுகளில் வளர்ந்த குற்றத்திற்காய் அமமண்ணிலிருந்து வெளியேற வேண்டியதாய் போயிற்று.

ஆக்கிரமிப்பு அரசின் கூலியாளாய் வந்தவன் ஜானக பெரேரா. ஜானகபுர என்று அந்த மண்ணில் எழுத முனைந்தான்.

கடல் எல்லை இல்லாத வட மத்திய மாகாணத்திற்கு கடற்கரையை காட்ட வேண்டுமாம். முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை மாவட்டங்களிலிருந்து பிய்த்தெடுத்த நிலத்தை அநுராதபுரத்துடன் இணைத்து வடக்கு மாகாணத்தையும், கிழக்கு மாகாணத்தையும் நிலத்தொடர்ச்சி இல்லாமல் கூறுபோட கொழும்பு வகுத்த கொடிய திட்டம் அதன் பெயர்தான் 'வெலிஓயா'.

மகாவலி அபிவிருத்தியின் எல்' வலயம் என்றொரு மகுடம் இதற்கு.

தமிழர் தாயகத்தின் இதயத்தை அபகரிக்கும் இந்தச் சூழ்ச்சிக்கு 'பிரதேச அபிவிருத்தி' என்று போர்வை போர்த்தப்பட்டது.

காடுகள் சூழ்ந்த முல்லை நிலமும் நெறகதிர்கள் முற்றி விளையும் மருத நிலமும், கடலலைகள் தாலாட்டும் நெய்தலும் ஒருங்கே அமைந்த இந்தப் பரபபை கபளீகரம் செய்ய குருநாகலில் இருந்தும் மாததறையில் இருந்தும் காடையர் கூட்டம கொண்டு வந்து குடியமர்த்தப்பட்டது. மணலாறு மாவட்டம் வெலி ஓயா ஆகியது.

பதவிக்குளம் பதவியா எனத் திரிந்தது.

ஆனால்
புலிகளின் தாக்குதலில் இருந்து காப்பாற்றும் வலிமை கமாண்டோப் பிரிவுகளுக்கும் கவசப் படைகளுக்கும் இல்லை என்பதை சிங்களவருக்கு மண்கிண்டிமலை உணர்த்தி இருக்கும்.

இந்த மண்ணில் வீசும் காற்றும். பூக்கும் மலரும் கூட சிங்கள ஆக்கிரமிப்பாளர்களுக்கு இனி அச்சமூட்டவே செய்யும்.

★

தொடரும் இத்தகைய வெற்றிகள் பூமிப்பந்தில் எங்கள் தேசத்தின் எல்லைக் கோடுகளை கிழித்துக் காட்டும்.

இலங்கை என்னும் தீவைப் பிளந்து எங்கள் தேசததின் எல்லைக் கோடுகளை போரிடும் புலிவீரர் குறித்துக் காட்டும் காலம் அண்மிக்கும்.

**இளையவன்**

> எமது பாதுகாப்புக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் போது எம்மையும் அறியாமலேயே எதிரிகளின் ஆற்றலுக்குப்பலம்சேர்க்கவும் உதவுகினறோம் போலுள்ளது:
>
> -சுமித்திரா பர்னான்டோ


**தகர்ப்பின் பின் மண்கிண்டிமலை இராணுவ முகாம்**



(படம்; இடிபாடுகள் இடையே தேடுதல் நடத்தும் இராணுவம்)
புலிகளின் வீரம் புதையுண்டு போகவில்லை.
பின்னர் எதைத் தேடுகிறீர்?

# விதைகளாகி மண்கிண்டிமலையினில் வீழ்ந்த வேங்கைகள்




## புதிய விடியலின் அதிர்வு

எதிரி முகாமினுள் இடிகள் முழங்கிட
எங்கள் வீரரின் ஆற்றல் விளங்கின
"இதயபூமிஒன்று" வெற்றியில்
எங்கள் கா...ரிலே ஒளி துலங்கின
பு யவிடியலின் அதிர்வு கண்டதுர்ப்
புல்லர் இதயமோ நடுநடுங்கின

# விதைகளாகி மண்கிண்டிமலையினில் வீழ்ந்த வேங்கைகள்



லெப்டினன்ட்
**அழகப்பன்**
[காந்தி]
கபிரியல்பிள்ளை
யோதிகாவலன்
ஏழாலை கிழக்கு - ஏழாலை




லெப்டினன்ட்
**நக்கீரன்**
[செந்தூரன்]
சோமசுந்தரம் அரசரத்தினம்
பழுகாமம் - மட்டக்களப்பு



லெப்டினன்ட்
**திருமலைநம்பி**
(பெனான்டோ)
வரப்பிரகாசம் யுஸ்ரீபன்
2 ஆம் ஒழுங்கை -
கொழும்புத்துறை, யாழ்.



லெப்டினன்ட்
**ஈழவேந்தன்**
(அமீர்)
கந்தசாமி விமலேந்திரன்
கனகராயன் குளம், வவுனியா.



லெப்டினன்ட்
**துரைக்கண்ணன்**
[விக்ரம்]
வைத்திலிங்கம் தயானந்தன்
ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி



லெப்டினன்ட்
**குயிலன்**
சிவப்பிரகாசம் சாந்தகுமார்
மூனாய் தெற்கு



லெப்டினன்ட்
**விமலன்**
(வில்லவன்)
கிருஷ்ணபிள்ளை
புண்ணியமூர்த்தி
வீரமாநாடுதோப்பூர்,
மூதூர்



லெப்டினன்ட்
**தமிழ்வாணன்**
[வாசன்]
செல்லையா வேதா
யூனியன் வீதி,
கோயில் போரதீவு
மட்டக்களப்பு



2-ம் லெப்.
**புகழரசன்**
சின்னத்துரை கோணேஸ்வரன்
காரைநகர், யாழ்ப்பாணம்.



2-ம் லெப்டினன்ட்
**சியாமணி**
யோகச்சந்திரன் ரவிசங்கர்
திருகோணமலை.
தற்போதைய முகவரி
சுதந்திரபுரம் சந்தி,
புதுக்குடியிருப்பு.

## புதிய விடியலின் அதிர்வு

எதிரி முகாமினுள் இடிகள் முழங்கிட
எங்கள் வீரரின் ஆற்றல் விளங்கின
"இதயபூமிஒன்று" வெற்றியில்
எங்கள் க...ரிலே ஒளி துலங்கின
பு யவிடியலின் அதிர்வு கண்டதுர்ப்
புல்லர் இதயமோ நடுநடுங்கின
விதியை முழுமையாய் மாற்ற எழுந்தநம்
வேங்கை மறவரின் வேகம்புரிந்தது

கனவுபோலொரு காட்சி நடந்தது!
கயவர் படைமுகாம் கதைமுடிந்தது!
"இனியமுப்பது நிமிடப்பொழு திலுள்"
இமயசாதனை புலிகள் படைத்தனர்
சினந்து "சிங்களத்தலை" கொதித்தது
செய்வதறிந்திடா (து) திகைத்துநின்றது
புனிதவேள்வியின் அனலிலாடிடும்
புலிகள்சாதனை உலகு மெச்சிடும்

எங்கள்தாயக "இதயபூமியில்"
எதிரியின் படை சிதைவுபண்ணவோ?
சங்கரித்தவர் தம்மை ஒட்டிடத்
தாவிமாமறப் புலிகள் பாய்ந்தன
தங்கமாமணித் தமிழ் ஈழமண்
தளைநொறுங் கியே தலைநிமிர்ந்திடும்
மங்கலத் திருநாளின் மலர்வினை
"மண்கிண்டி மலையடி" எதிரொலித்திடும்

உறுதி பொங்கிடும் உளத்தில்உணர்வொடு
உவகை பொங்கிட வெற்றி நாளினை
குறைகளின்றியே கொண்டாடு வோம்
குதித்து வீறுடன்நின்று ஆடுவோம்
மறந்திடாது உள்மனத்தி லிருத்தி நம்
மாவீரரை வாழ்த்தி வணங்கியே
இறுதிவெற்றியை எண்ணி அவர்வழி
ஏகிவெல்லுவோம் ஈழமக்களே!

—நிலாதமிழின்தாசன்

### சிந்தனைக்கு

வரம்பு மீறிய ஆர்வம் கொள்வது, பெரும்பாலும் எரிச்சல், பேராசை அல்லது ஆணவம் ஆகியவற்றின் காரணமாகத் தான் இருக்கும்.

- ஜானத்தன் ஸ்விஃப்ட்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25-08-1998

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2028

த. பெ. எண்-05

## விஷ வித்துக்களின் விதைப்பு

"இந் நாட்டின் முக்கிய பிரச்சினை வடக்குக் கிழக்குப் பிரச்சினையாகும். தர்ம உபதேசம் செய்தோ, பைபிளைப் புரட்டியோ தீர்வு காண முடியாது. இப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வே காணப்பட வேண்டும்.'' இவ்வாறு பேசப்பட்டது பாராளுமன்றத்திலோ அன்றி, அரசியல் பொது மேடையிலோ அல்ல.

பேசப்பட்ட இடம் விகாரை ஒன்றில் இடம்பெற்ற சிறுவர் பாடசாலைத் திறப்பு விழாவில் ஆகும். பேசியவர் சிறிலங்கா மகாபோதி சங்கத் தலைவரான காமினி ஜெயசூரியா. அப்பேச்சைக் கேட்டவர்கள் புதிய பாடசாலை திறப்பு விழாவில் கலந்து கொள்ள வந்த பாடசாலை சிறுவர்களும், பெற்றோர்களும் ஆகும்.

சிங்களவர் தமது மனித வளத்தை எவ்வாறு தமிழருக்கு எதிராகப் பயன்படுத்த வேண்டும் என ஒருவர் விகாரையில் போதனை செய்ய, வேறோர் பௌத்தபிக்கு வேறோர் இடத்தில் இயற்கை வளத்தை தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக எவ்வாறு பயன்படுத்தலாம் என ஆலோசனை தெரிவித்துள்ளார். ''கிழக்கு மாகாணத்தில் யக்கபுரவிலிருந்து திருக்கோணமடுவரையுள்ள காட்டுப் பிரதேசம் அழிக்கப்பட்டு மகாவலி அபிவிருத்திச் சபையின் கீழ் கொண்டு வரப்பட்டு குடியேற்றம் இடம்பெற வேண்டும். அப்பொழுது அங்கிருந்து விடுதலைப் புலிகளை விரட்டி விடலாம்'' என்பதே அவரது ஆலோசனை ஆகும். இவ் ஆலோசனையை வழங்கியவர் சீதலகம சீலாலங்கார தம்புலாகல தேரோ.

இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே காணப்பட வேண்டும் என்ற சிங்களப் பேரினவாதிகளின் கூச்சல் புதியதொன்றல்ல பாராளுமன்றத்தில் அரசியல்வாதிகளில் இருந்து பௌத்த விகாரைகளில் இடம்பெறும் போதி பூஜையில் பேசும் பிக்குகள் வரையும் இராணுவத் தீர்வு பற்றியே பேசுகின்றனர். இந் நிலையில், ஒரு தீவிர பௌத்த அமைப்பின் தலைவரான ஜெயசூரியாவும், ஒரு புத்த பிக்குவும் இனவாதம் பேசுவதிலோ, அன்றி இரா

## சமய சார்பற்ற முறையில் வாக்களிக்கப்பட வேண்டும்

- வி. என். காட்கில்

(சென்னை)

அரசியலில் இருந்து மதத்தைப் பிரிக்க வகைசெய்யும் அரசியலமைப்பு திருத்தச்சட்ட மசோதா வாக்காளர் சமயச் சார்பற்ற முறையில் தங்கள் விருப்பங்களைத்தெரிவிப்பதை உறுதிப்படுத்தும் என்று காங்கிரஸ் கட்சியின் செய்தித் தொடர்பாளர் வி. என். காட்கில் கூறியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன்தினம் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் மேலும் கூறுகையில் சமய சார்பற்ற ஜனநாயக அமைப்பில் வாக்காளர் தமது விருப்பங்களைப் பிரதிபலிப்பதை உறுதி செய்யும் என்றும் தெரிவித்தார்.

நல்ல ஜனநாயக அமைப்பில் அரசியல் கட்சிகள் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களில் குறிப்பிட்ட வற்றின் அடிப்படையில் வாக்களிக்குமாறு வாக்காளர்களைக் கோர வேண்டும். கொள்கை கோட்பாடுகள், திட்டங்கள் என்பவற்றின் அடிப்படையில் வாக்களிக்க வாக்காளர்களுக்கு வேண்டுகோள் விடவேண்டும் தேர்தல் பிரசாரம் காரணகாரிய அடிப்படையில் அமைய வேண்டுமேயன்றி உணர்ச்சிகளின் அடிப்படையில் மேற்கொள்ளப் படக்கூடாது அரசியல் கட்சிகள் மத உணர்வுகளைத் தூண்டும் வகையில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடக் கூடாது எனவும் தெரிவித்தார்.

## பழநி, ராணிப்பேட்டை இடைத்தேர்தல்கள் செப்.20-ல்

(சென்னை)

பழநி மக்களவைத் தொகுதி மற்றும் ராணிப்பேட்டைசட்ட மன்றத் தொகுதி என்பவற்றிற்கான இடைத்தேர்தல்கள் எதிர்வரும் இருபதாம் திகதியன்று நடத்தப்படும் என்று தேர்தல் ஆணையகம் அறிவித்து உள்ளது.

புதுடில்லியில் நேற்று முன்தினம் தேர்தல் ஆணையகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் இது தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு தொகுதிகளிலும் மத்திய அரசின் துணை பாதுகாப்பு படையின் பதினேழு அணியினரைப் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்துவதற்கு மத்திய அரசு அளித்த உறுதிமொழியின் அடிப்படையில்டிசம்பர்மாதத்தில் நடைபெறுவதாக இருந்த இடைத்தேர்தல்கள் முன்கூட்டியே நடத்தப்படுவதாகவும் தேர்தல் ஆணையகம் மேலும் கூறியுள்ளது.

## ஊர்வலம் பொதுவழிபாடு தவிர்க்க வேண்டுகோள்

- தமிழக முதல்வர்

(சென்னை)

மிலாதுநபி மற்றும் விநாயக சதுர்த்தி போன்ற பண்டிகைகளின் போது ஊர்வலங்கள் நடத்துவதையும், பொது இடங்களில் கூட்டு வழிபாடு நிகழ்த்துவதையும் தவிர்க்குமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஊர்வலங்கள் மற்றும் பொதுவழிபாடு என்பவற்றின் மூலம் மாநிலத்தின் மதச் சார்பற்ற தன்மைக்கு ஊறு நேரலாம் என்று பொது அமைப்புகள் சுட்டிக்காட்டியிருப்பதையடுத்து இவ்வாறு வேண்டுகோள் விடுவதாக அவர் சென்னையில் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாட்டின் பல வேறு பகுதிகளிலும் சட்டம் ஒழுங்கு நிலை சீராக இல்லாத போதும் தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகவே இருந்து வருவதாகவும், தமிழ மக்கள் மதம், மொழி, இனம் என்பவற்றால் வேறுபட்ட போதும் ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகிறார்களெனவும் தெரிவித்துள்ளார்.

## மசோதா நிறைவேற்றப்படின் சட்டபூர்வ பரிகாரம் தேடுவோம்

-பாரதிய ஜனதா அறிவிப்பு

(டில்லி)

அரசியலில் இருந்து மதத்தைப் பிரிக்கும் மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் சட்டபூர்வமான பரிகாரம் தேடப்போவ

வாஜ்பாய் இந்த மசோதா தமது கட்சியைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். பாரதீய ஜனதாவின் மற்றுமொரு தலைவ

# போட்டி பரீட்சைகள் மூலமே இனிமேல் பதவி உயர்வு

## - பொது நிர்வாக அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் பதவியுயர்வுகள் யாவும் இனிமேல் போட்டிப் பரீட்சைகள் மூலமே முடிவு செய்யப்படும் என்று பொது நிர்வாக உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது

இது தொடர்பாக கொழும்பில் அமைச்சு அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட அறிவிப்பு ஒன்றில் மேலும் பதவி உயர்வு வழங்கும் முறையைச் சீரமைப்பதற்காக இம்முறை அறிமுகப்படுத்தப்படுவதாகவும். வருடந்தோறும் பரீட்சைத் திணைக்களம் இதற்கெனப் போட்டிப் பரீட்சைகளை நடத்தும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையில் அடுத்த மாதம் 25ஆம் திகதியன்று அரசாங்க எழுதுவினைஞர் சேவையின் தரம் ஒன்றிற்கான போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள்ளது இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி இம்மாதம் 30ஆம் திகதியாகும். அரசாங்க எழுதுவினைஞர் சேவையில் பத்து வருட கால த்தைப் பூர்த்தி செய்த எவரும் இப் போட்டிப் பரீட்சையில் தோற்ற விண்ணப்பிக்க முடியும் எனவும், நாற்பது புள்ளிக்குக் கூடுதலாக பெறும் எவரும் தரம் ஒன்றுக்குப் பதவியுயர்வு வழங்கப்படும் எனவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது

### கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் விளையாட்டுத் துறையுடன் தொடர்புடைய சகலருக்குமான கூட்டமொன்று நாளை வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில் சகல விளையாட்டுக் கழகங்களினதும் உதைபந்தாட்டச் சங்கங்கள், கரபந்தாட்டச் சங்கங்கள் மற்றும் ஏனைய விளையாட்டுச் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்களையும் விளையாட்டுடன் தொடர்புடையவர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுள்ளது.

### வீரவணக்க கூட்டம்

(மானிப்பாய்)

கடந்த 7ஆம், 8ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த திருமலை மாவட்ட மாவீரர்களின் வீரவணக்கக்கூட்டம் இன்று மாலை 7 30 மணியளவில் நவாலி தெற்கு செப். பரமதேவா வீடமைப்புத் திட்டத்தில் நடைபெற உள்ளது.

## மக்களை இடம்பெயரவைப்பது அடிப்படை உரிமைமீறலாகும்

-கருத்தரங்கில் தெரிவிப்பு

(கொழும்பு)

தம் சொந்த நாட்டு மக்களை இடம் பெயர வைப்பது ஒரு மனித உரிமை மீறல் நடவடிக்கை என கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம், 19ஆம்திகதிகளில் இலங்கை மன்றக்கல்லூரியில் இடம்பெயர்வும் ஜனநாயகமும் என்ற தலைப்பில் நடந்த கருத்தரங்கிலேயே மேற்கண்டவாறு கூறப்பட்டது. இதில் இனத்துவ ஆய்வுக்கான சர்வதேச நிலையம், நோர்வே அகதிகள் பேரவை, மனிலா மனித உரிமை நிலையம், யூ. என். எச். சி.ஆர், பிரிட்டிஷ் அகதிகள்சபை, லண்டன் சர்வதேச லோட் அமைப்பு உலக பல்கலைக்கழகம், யுனிசெப் உட்பட பலபன்னாட்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் கொழும்பு பேராதனை, யாழ் பல்கலைக்கழகப் பேராசிரியர்களும் கலந்து கொண்டனர்.

## எச்.என். திடீர் மறைவு பேரதிர்ச்சியைஏற்படுத்தியது

இலங்கை ஆசிரியர் சங்கம்

இரண்டு தசாப்தங்களாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளராகக் கடமையாற்றிய எச்.என் பர்னாண்டோவின் திடீர்மறைவு எண்ணற்ற நண்பர்களுக்கும், சக தொழிலாளர்களுக்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் த. தேவராஜா வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

அந்த அறிக்கையில் -

அரச ஊழியர்கள் தேசிய பாதுகாப்பு நிதிக்கு ஒரு நாள் சம்பளத்தைக் கொடுக்கவேண்டும் என அரசு கோரியபோது, இது தமிழ்மக்களை நசுக்குவதற்கான ஒன்றே ஒழிய வேறில்லை எனக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது மட்டுமன்றி, இலங்கை ஆசிரியர்சங்க உறுப்பினர்கள் இந்த நிதிக்குப் பங்களிக்கக்கூடாது எனத் தீர்மானம் எடுத்துச் செயற்படுத்தினார் என்றும்,

இருதேசிய இனங்களுக்கிடையிலான முரண்பாடுகள் தீர்வதற்கு தமிழ்மக்களுக்கு சுய நிர்ணய உரிமை வேண்டும் என்று கோரியதோடு, 1977 இல் காலியில் கூடிய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தேசிய மாநாட்டில் தமிழ்மக்களுக்குச் சுய நிர்ணய உரிமைவேண்டும் என்ற தீர்மானத்தை முதலில் நிறைவேற்றுவதற்குக் காரணமாயிருந்தார்.

இராணுவ நடவடிக்கையின் போது 1987 இல் வடபகுதிக்கு விஜயம் செய்து தமிழ் மக்கள் படும் துன்பங்களை நேரடியாகக் கண்டறிந்து அரசிற்கு எதிரான அறிக்கைகளை ஏனைய தொழிற்சங்கங்களுக்கும் அனுப்பி தமிழ்மக்களின் இன்னல்களை அறிந்துகொள்ள அரும்பாடுபட்டார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இதய பூமி 1

களை விளைவித்ததாக்குதல்களாகும். அத்தோடு, சிறிலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக வகுத்திருந்த போர் முறைத் திட்டங்களை மீளாய்வுசெய்ய வேண்டிய நிர்ப்பந்தங்களையும் ஏற்படுத்திய தாக்குதல்க

போராளிகளுக்கே உரிய சிறப்பம்சமாகும்.

விடுதலைப் புலிகளின் இலட்சியப்பற்றும் மனோதிடமும் உலகப் புகழைப் பெற்றவை. விடுதலைப்புலிகளுடன் போரிட்ட எதிர்த்தரப்பினரே விடுதலைப்புலிகளின் மனோதிடம் பற்றியும், போரிடும் திறமைபற்றியும் புகழ்ந்து பேசி

ணத்திலே யககபுரவிலிருந்து திருக்கோணமடுவரையுள்ள காட்டுப்பிரதேசம் அழிக்கப்பட்டு மகாவலி அபிவிருத்திச் சபையின் கீழ் கொண்டு வரப்பட்டு குடியேற்றம் இடம்பெற வேண்டும். அப்பொழுது அங்கிருந்து விடுதலைப் புலிகளை விரட்டி விடலாம்'' என்பதே அவரது ஆலோசனை ஆகும். இவ் ஆலோசனையை வழங்கியவர் சீதலகம சிலாலங்கார தம்புலாகல தேரோ.

இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வே காணப்பட வேண்டும் என்ற சிங்களப் பேரினவாதிகளின் கூச்சல் புதியதொன்றல்ல பாராளுமன்றத்தில் அரசியல்வாதிகளில் இருந்து பௌத்த விகாரைகளில் இடம்பெறும் போதி பூஜையில் பேசும் பிக்குகள் வரையும் இராணுவத் தீர்வு பற்றியே பேசுகின்றனர். இந் நிலையில், ஒரு தீவிர பௌத்த அமைப்பின் தலைவரான ஜெயசூரியாவும், ஒரு புத்த பிக்குவும் இனவாதம் பேசுவதிலோ, அன்றி இராணுவத் தீர்வு பற்றிப் பேசியதிலோ ஆச்சரியப்பட ஏதுமில்லைதான்.

ஆனால், அவர்கள் பேசியுள்ள இடமும், விடயமுமே முக்கியமானவையாகும். சிங்கள சிறுவரின் மனதில் இனவாத வித்தை ஆழமாக வேரூன்றிவிட மேற்கொள்ளும் நடவடிக்கை இதுவாகும். அத்தோடு தலைமுறைதலைமுறையாக போருக்கு அவர்களை பயிற்றுவிக்கும் நடவடிக்கையாகும். அதே வேளை காடுகளை அழித்து விடுதல் என்ற யோசனையானது. இலங்கையின் இயற்கை சூழல் எக்கேடுகெட்டால்என்ன? நீரின்றி அழிந்தாலும் பரவாயில்லை, தமிழர்களை அழித்து விட வேண்டும் என்ற நோக்கம் கொண்டதாகும்.

தற்பொழுதே பௌத்த சிங்கள பேரினவாதத்தால் இலங்கை அழிந்து கொண்டிருக்கின்றது. போரினால் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகி மீள முடியாத ஒரு நிலை உருவாகி வருகின்றது. இந் நிலையில் எதிர்கால மனித வளத்தையும் போரில் ஈடுபடுத்துவதற்கும், அதன் மூலம் அழிவுகளை உண்டாக்கவும், அழிவுகளைச்சந்திக்கவும் பௌத்த பேரினவாதிகள் மேற்குறிப்பிட்ட பேச்சுக்கள் மூலம் சிறுவர்களைத் தூண்டுகின்றார்கள். சிறுவர்கள் மனதில் பதிய வைக்கப்படும் இனவாதமானது எதிர்காலத்தில் அவர்களையும் இரத்த வெறிபிடித்தவர்களாக்கி பௌத்தத்தின் பெயரால் கொலை புரியத் தூண்டுகின்றது.

இதேபோன்றே இயற்கை வளங்களையும் அழிக்கவும், அதன் மூலம் போரை தொடர்ந்தும் வலுவடையச் செய்யவும் அவர்கள் முனைகின்றார்கள். காடு அழித்தல் என்பது இயற்கைச் சூழலைப் பாதிக்கும் என்பது ஒரு புறம் இருக்க, காடுகளை அழித்து குடியேற்றங்கள் அமைத்தல் என்பது மீட்சியில்லாத போர் ஒன்றிற்கான முன்முயற்சியே ஆகும். ஏனெனில் இன்று இடம் பெற்றுவரும் போரில் முக்கிய விவகாரமாகவும் தமிழரினால் என்றும் விட்டுக் கொடுக்கப்பட முடியாததாகவுள்ளதும் குடியேற்றங்கள் என்ற பெயரில் இடம்பெறும் நில ஆக்கிரமிப்பே ஆகும்.

இந் நிலையில், பேரினவாதிகளின் மேற்குறிப்பிட்ட போதனைகள் ஏற்றுக்கொள்ளப்படுமானால், இந்ததலைமுறை மட்டுமல்ல அடுத்த தலைமுறையும், இந்த நூற்றாண்டில் மட்டுமல்ல, அடுத்த நூற்றாண்டிலும் தொடர்ந்து சண்டை யிட்டே ஆக வேண்டிவரும். இதன்மூலம் சமாதானம், அமைதி என்பன தொலை தூரத்திற்குச் சென்று விடுவது மட்டுமல்ல, சிறிலங்கா விரும்பத்தகாத பெரும் துயர்களை மேலும்சந்திக்கவேண்டி வருவதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

துவதையும் தவிர்க்குமாறு தமிழக முதல்வர் ஜெயலலிதா பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஊர்வலங்கள் மற்றும் பொதுவழிபாடு என்பவற்றின் மூலம் மாநிலத்தின் மதச் சார்பற்ற தன்மைக்கு ஊறு நேரலாம் என்று பொது அமை வேறு பகுதிகளிலும் சட்டம் ஒழுங்கு நிலை சீராக இல்லாத போதும் தமிழ்நாடு அமைதிப் பூங்காவாகவே இருந்து வருவதாகவும், தமிழ மக்கள் மதம், மொழி, இனம் என்பவற்றால் வேறுபட்ட போதும் ஒற்றுமையாகவே வாழ்ந்து வருகிறார்களெனவும் தெரிவித்துள்ளார்.

## மசோதா நிறைவேற்றப்படின் சட்டபூர்வ பரிகாரம் தேடுவோம்

### -பாரதிய ஜனதா அறிவிப்பு

(டில்லி)

அரசியலில் இருந்து மதத்தைப் பிரிக்கும் மசோதா பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டால் சட்டபூர்வமான பரிகாரம் தேடப்போவதாக பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் எல். கே. அத்வானி கூறியுள்ளார்.

புதுடில்லியில் கடந்த ஞாயிறு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், இந்தச் சட்டமூலம் அரசியல் சாசனத்தின் அடிப்படை அம்சங்களை மீறுவதாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை பாராளுமன்ற மக்களவையில் உரை நிகழ்த்திய பாரதீய ஜனதாவின் பொதுச் செயலாளர் ஏ. பி. வாஜ்பாய் இந்த மசோதா தமது கட்சியைக் கட்டுப்படுத்தும் நோக்கிலேயே கொண்டு வரப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். பாரதீய ஜனதாவின் மற்றுமொரு தலைவரான கிஷன்லால் சர்மா தமதுரையில் இந்த மசோதா தேவையற்றது, மிகையானது, நாட்டின் கலாசார பாரம்பரியத்தின் மீது தொடுக்கப்பட்ட தாக்குதல் என்று வர்ணித்தார்.

மேலும், ஜனதா தள் (அஜித் பிரிவின்) ஜிதேந்திர பிரசாத், ஜனதா தளின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோரும இந்த மசோதா விடயத்தில் அரசின் போக்கைக் கண்டித்துள்ளனர்.

கழகங்களினதும் உதைபந்தாட்டச் சங்கங்கள், கரபந்தாட்டச் சங்கங்கள் மற்றும் ஏனைய விளையாட்டுச் சங்கங்களின் நிர்வாக உறுப்பினர்களையும் விளையாட்டுடன் தொடர்புடையவர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக்குழு கேட்டுள்ளது.

### வீரவணக்க கூட்டம்

(மானிப்பாய்)

கடந்த 7ஆம், 8ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த திருமலை மாவட்ட மாவீரர்களின் வீரவணக்கக்கூட்டம் இன்று மாலை 7 30 மணியளவில் நவாலி கெற்கு செப். பரமதேவா வீடமைப்புத் திட்டத்தில் நடைபெற உள்ளது.

திருமலை மாவட்ட இடம் பெயர்ந்த மக்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட இவ்வீரவணக்க கூட்டத்தில் க. பிரிதுகாந் தலைமை வகிக்கின்றார். மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழக பொறுப்பாளர் திரு. ரவி, திருமலை மாவட்ட துணைத்தளபதி திரு மது ஆகியோர் உரை நிகழ்த்தவும் உள்ளனர்

இதனைத் தொடர்ந்து பல கலை நிகழ்வுகளும் இடம்பெற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு நிதிக்கு ஒரு நாள் சம்பளத்தைக் கொடுக்கவேண்டும் என அரசு கோரியபோது, இது தமிழ்மக்களை நசுக்குவதற்கான ஒன்றே ஒழிய வேறில்லை எனக் கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது மட்டுமன்றி, இலங்கை ஆசிரியர்சங்க உறுப்பினர்கள் இந்த நிதிக்குப் பங்களிக்கக்கூடாது எனத் தீர்மானம்

போது 1987இல் வடபகுதிக்கு விஜயம் செய்து தமிழ் மக்கள் படும் துன்பங்களை நேரடியாகக் கண்டறிந்து அரசிற்கு எதிரான அறிக்கைகளை ஏனைய தொழிற்சங்கங்களுக்கும் அனுப்பி தமிழ்மக்களின் இன்னல்களை அறிந்துகொள்ள அரும்பாடுபட்டார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இதய பூமி 1

களை விளைவித்ததாக்குதல்களாகும். அத்தோடு, சிறிலங்கா இராணுவம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக வகுத்திருந்த போர் முறைத் திட்டங்களை மீளாய்வுசெய்ய வேண்டிய நிர்ப்பந்தங்களையும் ஏற்படுத்திய தாக்குதல்களாகும் இந்தவகையில் தலைவர் பிரபாகரன் வகுத்த இப்புதிய போர்முறைத் திட்டமானது சிங்கள இராணுவத்தை பெரும் நெருக்கடியில் தள்ளியுள்ளது.

★

இதேவேளை, மண்கிண்டி மலை முகாம் போன்ற கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முகாமை 30 நிமிடத்திற்குள் மின்னல் வேகத்தில் தாக்கி அழிக்கக்கூடிய திறமையானது விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளுக்கே உரிய சிறப்பம்சமாகும்.

விடுதலைப் புலிகளின் இலட்சியப்பற்றும் மனோதிடமும் உலகப் புகழைப் பெற்றவை. விடுதலைப்புலிகளுடன் போரிட்ட எதிர்த்தரப்பினரே விடுதலைப்புலிகளின் மனோதிடம் பற்றியும், போரிடும் திறமைபற்றியும் புகழ்ந்து பேசியுள்ளனர் இந்நிலையில், மண்கிண்டி மலை தாககுதலும் விடுதலைப புலிகளின் தனிச் சிறப்பு என்றே கூறவேண்டும்.

மண்கிண்டிமலை இராணுவ முகாம் தாக்குதலின் போது எதிரித் தரப்பினர் போரிடுவதற்கு சந்தர்ப்பத்தையே விடுதலைப் புலிகள் கொடுக்கவில்லைஎன எதிர்த் தரப்பினர் தெரிவிக்கும் அளவிற்கு புலிகளின் தாக்குதல் வேகம் இருந்தது. மண்கிண்டி மலை இராணுவ முகாமில் இருந்து கல்லெறி தூரத்தில் நான்கு இராணு முகாம்கள் இருந்தும், அம முகாம்களுக்கு தகவல்கள் கிட்டும் மூன்பே விடுதலைப்புலிகள் மணகிண்டி மலை முகாமைக் கைப்பற்றுவதென்பது அவர்கள் தமது இலக்கு குறித்து எவ்வளவு வேகமாகவும், விவேகத்துடனும் செயற்பட்டார்கள் என்பதற்கு சிறந்த சான்றாகும்

இந்நிலையில் மண்கிண்டி மலையில் கிடைத்த வெற்றியானது தலைவர் பிரபாகரனின் போர்க்கலைபற்றிய அறிவுககும், பேராற்றலுக்கும், போராளிகளின் வேகததிற்கும் மனவுறுதிக்கும் கிடைதத வெற்றிஎன்பதில் சந்தேகமிலலை.

ஆவ்வாறாக விடுதலைப் புலிகள் மண்கிண்டிமலையில் ஈட்டிய இவ் வெற்றியானது ஈழபபோர் குறிதத சிறிலங்கா இராணுவத்தின் மூலதந்திரோபாயத்தையே சிதைதது விடும் ஒன்றாக அமைந்துவிட்டது.

இதனால், ஈழப்போர் குறித்த எதிர்காலததிட்டம் குறித்து இராணுவத் தலைமைப் பீடமும், அரசாங்கமும் பெரும் குழப்பத்தில் ஆழ்ந்துபோயுள்ளன. புதிதாக வகுகக வேண்டிய போர் யுக்தியில் இருப்பதைத் தக்கவைததுக் கொள்வதா? அல்லது எதிர்த் தாக்குதல நடத்துவதா? இதில் எதற்கு முன்னுரிமை அழிப்பது என்பதே இன்று இராணுவத் தலைமையின் முன்னுள்ள கேள்வியாகும்.

## சந்தை விலை விபரம் (23-08-1993)

### யாழ். மாவட்ட சராசரி சில்லறை விலைகள்

| தொ. இல. | பொருள்கள் | அலகு | திருநெல்வேலி | பெரிய கடை | சுன்னாகம் | அச்சுவேலி | சங்கானை | நெல்லியடி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| 01. | குத்தரிசி | கி.கி | 30.00 | 30 00 | 30.00 | 29.50 | 31.00 | 30.00 | 30 50 | 31 00 |
| 02. | கோதுமை மா | ,, | 14.00 | 13.50 | 14.00 | 14.00 | 13.00 | 14.50 | 14.00 | 15.00 |
| 03. | சீனி | ,, | 29.50 | 30 50 | 31.50 | 31.00 | 30 00 | 31.00 | 34.50 | 32.00 |
| 04. | கத்தரி | ,, | 14.00 | 19.00 | 12.50 | 18.00 | 13.00 | 15.00 | 17.00 | 14.50 |
| 05. | வெண்டி | ,, | 11.00 | 20.00 | 11.00 | 21.00 | 07.00 | 15.00 | 19.00 | 18.00 |
| 06. | பாகல் | ,, | 12.00 | 20.50 | 10.50 | 18·50 | 13.50 | 16.00 | 20.00 | 19.50 |
| 07. | புடோல் | ,, | 07 50 | 21.00 | 09.50 | 09.00 | 16.50 | 12.00 | 16.50 | 15 00 |
| 08. | பயற்றங்காய் | ,, | 13.00 | 21 00 | 13 50 | 15.50 | 14.50 | 16.00 | 17.00 | 13 50 |
| 09. | தக்காளி | ,, | 23.00 | 29.00 | 13.00 | 27.50 | 25.00 | 26.00 | 24.50 | 19.00 |
| 10. | வாழைக்காய் | ,, | 33.50 | 40.00 | 39.00 | 40.50 | 43.00 | 38.00 | 40.00 | 46.00 |
| 11. | பீற்றூட் | ,, | 13.00 | 18.50 | 12.50 | 21.00 | 21.00 | 14.50 | 18.50 | 37 00 |
| 12. | தேங்காய் | ஒன்று | 13.00 | 15.50 | 16.50 | 15.00 | 13 50 | 14.00 | 16.50 | 12.00 |
| 13. | பச்சைமிளகாய் | கி.கி | 41.50 | 41.50 | 37.50 | 51.50 | 43 50 | 35.00 | 38.00 | 36 50 |
| 14. | எலுமிச்சை | ,, | 155.00 | 153.00 | 150.00 | 136.50 | 182.50 | 120.00 | 140.00 | 125 00 |
| 15. | வெங்காயம் | ,, | 11.00 | 12.50 | 11.50 | 12.00 | 13.50 | 13.00 | 12.50 | 11.00 |
| 16. | கப்பல் வாழைப்பழம் | ,, | 52.50 | 50.00 | 50.00 | 42.00 | 42.50 | 60.00 | 53.00 | 40.00 |
| 17. | இறால் | ,, | 110.00 | 70.00 | 75.00 | 71.50 | 90.00 | 100.00 | 100.00 | 40.00 |
| 18. | பெரிய மீன் | ,, | 155.00 | — | — | 135.00 | 130.00 | 150.00 | 120.00 | 95.00 |
| 19. | சிறிய மீன் | ,, | — | 70.00 | 60.00 | 85.00 | 85.00 | 40.00 | 50;00 | 25 00 |
| 20. | முட்டை | ஒன்று | 07.50 | 07.50 | 07.50 | 08.00 | 8.00 | 07.50 | 08.00 | 06.50 |

தகவல்:- தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

# ஈழநாதம்

## இடைக்கால நிர்வாகம் அமைக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு

### சபாநாயகர் முகமட் தெரிவிப்பு

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு இடைக்கால நிர்வாக சபையொன்றை அமைக்க சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவிற்கு அதிகாரம் இருப்பதாக சபாநாயகர் எம். எச். முகமட் தெரிவித்தார். அரசியலமைப்பின் 13ஆம் திருத்தம் இதற்கான அதிகாரத்தை அவருக்கு வழங்குவதாகவும் அவர் பத்திரிகையாளர் மத்தியில் தெரிவித்தார்.

வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு முடிவு ஏற்படும் வரை சிவில் நிர்வாகத்தை நடாத்துவதற்கு இடைக்கால நிர்வாக சபை பொருத்தமானது எனவும், இது தொடர்பாக பாராளுமன்ற அரசியல் தலைவர்களின் உதவியை தான் நாடியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்தளவில் வடக்கு கிழக்கில் தேர்தலை நடத்துவதையே விரும்புவதாகவும் தெரிவித்தார்.

## பொருண்மியமேம்பாட்டுகழக பெயரில் மாற்றம்

தமிழீழ விடுதலைப் புலிகளின் துணை அமைப்புகளில் ஒன்றாகச் செயற்பட்டுவரும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தின் பெயரில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது மேற்படி அமைப்பின் பெயர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் (TAMIL EELAM ECONOMCI DEVELOPMENT ORGANISATION-TEEDOR) என மாற்றம் செய்யப்பட்டுள்ளது.


யாழ் நகர் ஸ்ரீதர் திரையரங்கில்

'Wild Geese'

'வைல்ட் கீஸ்'

[தமிழ் விளக்கம்]

சண்டைக் காட்சிகள் நிறைந்த படம்

தினசரி மாலை 4.00 மணி, 6.00 மணி

சனி, ஞாயிறு தினங்களில்

காலை 10.30 மணி,

மாலை 4.00 மணி, 6.00 மணி (சி-7114)

அராலி கரைப்பிட்டி

விநாயகர் ஆலயம்

சங்காபிஷேகம்

25-8-93 இன்று புதன்கிழமை

பகல்: சங்காபிஷேகம் [1008]

இரவு: தண்டிகைத் திருவிழா

நாதகானங்கள்:

காலை 9 மணி தொடக்கம்

மாலை 3 மணி தொடக்கம்


## வீர வணக்கக் கூட்டம்

வடமராட்சிக் கோட்டம் கரவெட்டி வட்டத்தில் 7 ஆம், 8 ஆம் மாதங்களில் வீரச்சாவடைந்த மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8. மணிக்கு கரவெட்டி கிளவித்தோட்டம் பிள்ளையார் கோவிலடியில் நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் கலந்துகொண்டு உரையாற்றவுள்ளனர். கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## தபால் இன்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

''வாதுவ'' கப்பலில் எடுத்து வரப்பட்ட சுமார் 211 வெளியூர் மற்றும் உள்ளூர்த் தபால் பொதிகள் நேற்று யாழ் பிரதான தபாலகத்திற்கு எடுத்து வரப்பட்டன.

இவற்றில் ஒரு தொகுதி சாதாரண கடிதங்கள் அடங்கிய தபால் பொதிகள் தரம் பிரிக்கப்பட்டு நேற்றே விநியோகிக்கப்பட்டன.

மிகுதித் தபால் பொதிகள் இன்று தரம் பிரிக்கப்பட்டு உடன் விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். பிரதான தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## ஒருமாத மாகியும்

அபகரித்த சிங்கள அரசு, அவற்றிற்கு சிங்களப் பெயர்களையும் சூட்டி, சிங்களவர்களைக் குடியமர்த்தி அம்மண்ணை சிங்களவர்கள் பூமியாகமாற்ற பெருமுயற்சிகளை செய்து வருகின்றது. அத்தகைய பழந்தமிழ்க் கிராமங்களில் ஒன்று தான் மண்கிண்டி மலை.

இது கொக்குத்தொடுவாய் கிராமத்திலிருந்து மூந்தி கைக்குளம் நோக்கிச் செல்லும் வீதியின் மையத்தில் அமைந்துள்ளது.

இப் பாதையோரம் பலமான - தொடர் இராணுவ வேலியொன்றை அமைத்து தமிழீழத்தை இரு கூறுகளாக பிரிக்க சிங்களப்படைகள் முயன்றன இந்த இராணுவ வேலி

உடைக்கப்படமுடியாத அளவிற்கு பலமானதாக இருக்க வேண்டும் என்ற நோக்கில் மண்கிண்டிமலையில் சிங்களப் படைகள் முகாமொன்றை அமைத்து வைத்திருந்தன.

இந்த முகாம் தான் புலிகளின் பாய்ச்சலுக்கு உள்ளாகி சிங்களப் பேரினவாதிகளின் நாசகாரத் திட்டத்திற்கு பலத்த அடி கொடுத்துள்ளது.

சிங்களப்படைகளினால் ராணுவமயப் படுத்தப்பட்ட மண்கிண்டிமலைப் பகுதிக்குள் எப்படி புலிகள் நுழைந்து தாக்கி, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த இராணுவ சாதனையை நிலைநாட்டினார்கள் என்பதை மக்களும் அறியக்கூடியவிதத்தில் ஒரு மாதிரி அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

கோம்பையன்மணல் மயானப்பகுதியில் பிரமாண்டமான அளவில் அமைக்கப்பட்ட இந்த மாதிரி அமைப்பைப் பார்வையிடுவதன்மூலம் புலிகள் நிகழ்த்திய இந்த இராணுவ சாதனையின் பரிமாணத்தை உணர்ந்து கொள்ளமுடியும்.

இன்றைய தினத்தில் கொண்டாடப்படும் இதயபூமி 1 வெற்றிவிழாவில் கலந்து

கணகாட்சி

நேரம் நின்று பார்வையிட்டனர்.

மற்றொரு பகுதியில் மண்கிண்டிமலை இராணுவ முகாமின் மாதிரி அமைப்பு ஒன்று பெரிய அளவில் வடிவமைக்கப்பட்டுள்ளது அதில் மண்கிண்டிமலையில் அமைக்கப்பட்டிருந்த முகாம் மற்றும் அதனை அண்டி அமைந்திருந்த பிரதான இராணுவ முகாம் மற்றும் அதனைச் சூழவிருந்த காவலரண்கள் பற்றிய அமைப்புக்களும் காட்டப்பட்டுள்ளன.

இதன் கிழக்குப்புறத்தில் அமைந்துள்ள வயல் வெளியில்

இராணுவ

படும் பணத்தை பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்தியிருப்பின் நாட்டில் பெருமளவு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கும் என்பதை சிறிலங்கா ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டுள்ளார் என மிலிட்டறி பலன்ஸ் என்ற அந்த சஞ்சிகை கூறுகிறது.

## கிழக்கில் 1994 சர்வசன வாக்கெடுப்பு வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்கு மாகாணமும் கிழக்கு மாகாணமும் தொடர்ந்து ஒரே நிர்வாகப் பிரிவாக விளங்க வேண்டுமா? இல்லையா? என்பது குறித்து வடக்கிலும் கிழக்கிலும் அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்துவதற்கான திகதியை ஜனாதிபதி விஜேதுங்க மேலும் பின்போட்டுள்ளாரெனசிறிலங்கா வானொலி தெரிவித்தது.

1994 பெப்ரவரி 18 ஆம் திகதி கிழக்கு மாகாணத்திலும் ஏப்ரல் 28 ஆம் திகதி வடக்குமாகாணத்திலும் இந்த அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தப்படும் என புதிதாக அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் அவ்வானொலி தெரிவித்தது

இந்த அபிப்பிராய வாக்கெடுப்பு கடந்த ஐந்து வருடங்களாக பிற்போடப்பட்டு வருவதும் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்க பதவி ஏற்ற பின் முதல் முறையாக அவர் இத்தேர்தலை பின் போடுவதும் குறிப்பிடத்தக்கது.

## இளைஞர் கைது

(வடமராட்சி)

மருதானையில் வசித்துவந்த நெல்லியடியைச் சேர்ந்த வாலிபர் ஒருவர் மருதானைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நெல்லியடி வடக்கு தேவரையாளியைச் சேர்ந்த மார்டின் யோசேப் (வயது 30) என்பவரே கைது செய்யப்பட்டவராவார். (யோ)

## பெருவிழா

யாழ் அடைக்கல அன்னை ஆலயப் பெருவிழா இம்மாதம் 30 ஆம் திகதி மாலை 4 45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

செப்டம்பர் 7 ஆம் திகதி மாலை 5 மணிக்கு நற்கருணை ஆராதனை சுற்றுப்பிரகாரம் ஆகியன இடம்பெறும்

8 ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு முதல் திருப்பலியும் காலை 6 15 மணிக்கு யாழ் ஆயர் கலாநிதி தாமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் திருநாள் பாடல் கூட்டுத்திருப்பலி நடைபெறும் மாலை 4. 30 மணிக்கு திருச்சொருப பவனி ஆரம்பமாகும் (21)

## தியாகி சிவகுமாரனின் 43வது பிறந்த தினம் நாளை

(யாழ்ப்பாணம்)

சிங்கள இனவாத அரசிற்கு எதிராகவும், எம் மண்ணின் விடிவிற்காகவும் தனி மனிதனாகவும் முதற் போராளியாகவும் நின்று போராடித் தன் இன்னுயிரைத் தியாகம் செய்த தியாகி சிவகுமாரனின் 43-வது பிறந்த தினம் நாளை வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

உரும்பராயிலுள்ள சிவகுமாரனின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சிவகுமாரனின் அனுதாபிகளையும், ஆதரவாளர்களையும் கலந்துகொள்ளுமாறு உரும்பராய் தியாகி பொன்.சிவகுமாரனின் நினைவாலய சபையினர் கேட்டுள்ளனர்.

மகேஸ்வர பூசை

கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி முருகன் ஆலய மகோற்சவத்தினை முன்னிட்டு மகேஸ்வர பூசை இடம்பெற்று வருகிறது.

அதிகாரிகளை

அழிக்கப்பட்டதற்கான காரணம் குறித்து மேஜர் ஜெனரல் ஜெரி டி சில்வா தலைமையில் விசாரணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டு அக் குழு தனது அறிக்கையை அண்மையில் வெளியிட்டிருந்தது தெரிந்ததே.


ஈராண்டு நினைவலைகள்



பிறப்பு: 09-01-1976

வீரச்சாவு: 17-09-1991

திதி: 25-08-1993

வீரவேங்கை மில்டன்

[தெட்சணாமூர்த்தி சங்கரதாஸ்]

மாவீரர் குடும்பமெனும் மாநிதியம் தந்து
போய் வீரா நீ வீரசொர்க்கம் புகுந்தனையோ-இல்லை
தாய்நாடு காக்கவென ஒரு தாய்வயிற்றில் கருவாகி
உருவாகி மீண்டும் களத்தினிலே குதிப்பாயா?

மில்டனின் இந்நிகழ்வில் சகபோராளிகளையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கரதாஸ் வீதி, உரும்பராய் மேற்கு. - குடும்பத்தினர். (சி-7247)

3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மாலை 4.00 மணி, 6.00 மணி (சி-7114)


அராலி கரைப்பிட்டி

## விநாயகர் ஆலயம் சங்காபிஷேகம்

**25-8-93 இன்று புதன்கிழமை**

பகல்: சங்காபிஷேகம் [1008]
இரவு: தண்டிகைத் திருவிழா

**நாதகானங்கள்:**

காலை 9 மணி தொடக்கம்
மாலை 3 மணி தொடக்கம்

கோவிந்தசாமி புதல்வர்கள் - சுந்தரமூர்த்தி குமு
கானமூர்த்தி – பஞ்சமூர்த்தி சகோதரர்கள்
சிதம்பரநாதன் குழுவினர்

தெய்வீகப் பேருரை:

**“அன்பே சிவம்”**

நிகழ்த்துபவர்: கம்பவாருதி இ. ஜெயராஜ் அவர்கள்
அகில இலங்கை கம்பன் கழக
அமைப்பாளர்

பிரசுர உதவி – சோபனா ஆடை அகம்,
மதுரா சில்க்ஸ், பெரியகடை,
யாழ்ப்பாணம்.

(5762)



## NEW SCIENCE HALL

Kannathiddy Road, Jaffna.

# 94 A/L

## DAY CLASS

**பகல்நேர வகுப்பு**

**ஆரம்பம்: 31-08-93**

**Tuesday 8.00 a.m.**

சி-7231)


இது கொக்குத்தொடுவாய் கிராமத்திலிருந்து மூந்தி வைக்குளம் நோக்கிச் செல்லும் வீதியின் மையத்தில் அமைந்துள்ளது.

இப் பாதையோரம் பலமான - தொடர் இராணுவ வேலியொன்றை அமைத்து தமிழீழத்தை இரு கூறுகளாக பிரிக்க சிங்களப்படைகள் முயன்றன. இந்த இராணுவ வேலி சிங்களப்படைகளினால் இராணுவமயப் படுத்தப்பட்ட மண்கிண்டிமலைப் பகுதிக்குள் எப்படி புலிகள் நுழைந்து தாக்கி, வரலாற்று முக்கிய த்துவம் வாய்ந்த இந்த இராணுவ சாதனையை நிலைநாட்டினார்கள் என்பதை மக்களும் அறியக்கூடியவிதத்தில் ஒரு மாதிரி அமைப்பு உருவாக்கப் பட்டுள்ளது.

கோம்பையன்மணல் மயானப்பகுதியில் பிரமாண்டமான அளவில் அமைக்கப்பட்ட இந்த மாதிரி அமைப்பைப் பார்வையிடுவதன்மூலம் புலிகள் நிகழ்த்திய இந்த இராணுவ சாதனையின் பரிமாணத்தை உணர்ந்து கொள்ளமுடியும்.

இன்றைய தினத்தில் கொண்டாடப்படும் இதயபூமி 1 வெற்றிவிழாவில் கலந்து கொண்டு சிறப்பித்து, இந்த வெற்றிக்காக உயிர் கொடுத்த பத்து புலி வீரர்களுக்கு வீரவணக்கத்தை செலுத்துமாறும் அனைத்து மக்களையும் அன்போடு அழைக்கின்றோம்.

தலைமையில் திருநாள் பாடல் கூட்டுத்திருப்பலி நடைபெறும் மாலை 4.30 மணிக்கு திருச்சொரூப பவனி ஆரம்பமாகும்.

(21)

### இராணுவ

படும் பணத்தை பொருளாதார அபிவிருத்திக்கு பயன்படுத்திருப்பின் நாட்டில் பெருமளவு அபிவிருத்தி ஏற்பட்டிருக்கும் என்பதை சிறிலங்கா ஜனாதிபதியும் ஏற்றுக் கொண்டுள்ளார் என மிலிடறி பலன்ஸ் என்ற அந்த சஞ்சிகை கூறுகிறது.

பாகிஸ்தான் தனது தேசிய வருமானத்தில் பாதுகாப்பு செலவிற்காக 7 வீதத்தையும் இந்தியா 3 வீதத்தையும் செலவிடுவதாக அந்நூல் கூறுகிறது.

### கணகாட்சி

நேரம் நின்று பார்வையிட்டனர்.

மற்றொரு பகுதியில் மண்கிண்டிமலை இராணுவ முகாமின் மாதிரி அமைப்பு ஒன்று பெரிய அளவில் வடிவமைக்கப் பட்டுள்ளது. அதில் மண்கிண்டி மலையில் அமைக்கப்பட்டிருந்த முகாம் மற்றும் அதனை அண்டி அமைந்திருந்த பிரதான இராணுவ முகாம் மற்றும் அதனைச் சூழவிருந்த காவலரண்கள் பற்றிய அமைப்புக் களும் காட்டப்பட்டுள்ளன.

இதன் கிழக்குப்புறத்தில் அமைந்துள்ள வயல் வெளியில் இதயபூமி 1 வெற்றிகரத் தாக்குதலின் நேரடி ஒளிப்பதிவு வீடியோத் திரைப்படம் மற்றும் மாவீரர் நிகழ்வுகள் அடங்கிய ஒளிவீச்சு திரைப்படம் ஆகியன காண்பிக்கப்பட்டன. பெருமளவு மக்கள் குழுமியிருந்து தொலைக்காட்சியில் இவற்றை பார்த்தனர்.


## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

### 24-08-93

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்: 10670

வடபகுதிக்கு உள்ளே வந்த வாகன இலக்கங்கள்:

26-1728, 27-5907, 26-4139, 28 8951, 26-3582
24-8710, 27-6493, 24-5679, 24-2496, 27 7281
24-3906, 26-1253, 27-6704, 26-8497, 27-5186
40-2295, 26-6811, 41-7230, 24-6161.

வடபகுதிக்கு வெளியே சென்ற வாகன இலக்கங்கள்:

24-4303, 26-0675, 42-3267, 28-6640, 24-9676
24-3258, 27-7986, 26-3321, 41-4194.



## நியூ யாழ் சைனீஸ்

கோழிப் புரியாணி
நூடில்ஸ்
ப்ரைற்றைஸ்
சூப் வகைகள்
RICE & CURRY
மற்றும்
சைனீஸ்
உணவு வகைகளுக்கு

**நியூ யாழ் சைனீஸ்**

124, 1 ஆம் குறுக்குத் தெரு
யாழ்ப்பாணம். (5768)



தமிழீழத்தின் புதிய அத்தியாயம்!

அழகிய வர்ண படங்களை காலாகாலத்திற்கு நிலைத்து நிற்க சிறந்த முறையில் சட்டமிட்டு அமைத்துக் கொடுக்கும் முன்னணி நிறுவனம்

# ★ படமாடம் ★

சகலவிதமான ★ பூக்கண்ணாடி
★ சாதாரண கண்ணாடி
★ அலுமினிய இணைப்புக்கள்
★ சாமிப்படங்கள்

ஆகியவற்றை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும், மற்றும் சகலவிதமான படங்களை சட்டமிட்டு பெற்றுக்கொள்ளவும் நாடவேண்டிய

ஒரே ஸ்தாபனம்

**படமாடம்** அர்ச்சுனா வீதி, யாழ்ப்பாணம்.

(சி-7261)




திதி: 25-08-1993

## வீரவேங்கை மில்டன்

[தெட்சணாமூர்த்தி சங்கரதாஸ்]

மாவீரர் குடும்பமெனும் மாநிதியம் தந்து
போய் வீரா நீ வீரசொர்க்கம் புகுந்தனையோ-இல்லை
தாய்நாடு காக்கவென ஒரு தாய்வயிற்றில் கருவாகி
உருவாகி மீண்டும் களத்தினிலே குதிப்பாயா?

மில்டனின் இந்நிகழ்வில் சகபோராளிகளையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கரதாஸ் வீதி,
உரும்பராய் மேற்கு. (சி-7247)

– குடும்பத்தினர்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
25-11-1962

மறைவு:
25-08-1990

### அன்ரன் அகிஸ்லாஸ் (மோகன்)

நம் குலவிளக்கே நீ மறைந்து மூன்று ஆண்டு ஆனாலும் எம் நெஞ்சங்களில் அணையாது சுடர்விட்டுக் கொண்டே இருக்கின்றாய். என் அன்புத் தெய்வமே உன் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன்பிரிவால் வாடும்;
அப்பா, அம்மா, சகோதரர்,
சகோதரிகள், அம்மம்மா,
மச்சான்மார், மச்சாள்மார்,
உற்றார் உறவினர்கள்.

4 ஆம் வட்டாரம், மண்டைதீவு. (5767)

92, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

திரு.

### பொன்னையா கந்தையா

(ஓய்வுபெற்ற ஆசிரியர், ஸாகிராக் கல்லூரி, கொழும்பு)

திரு. பொன்னையா கந்தையா 24-08-93-ல் காலமானார். இவர் காலஞ்சென்ற ஆசைமுத்துவின் அன்புக் கணவரும், பதுமநிதி நவரேந்திரன் (சட்டத்தரணி), பரராஜசேகரன் (அன்றீஸ் கொம்பனி, நிர்வாக உத்தியோகத்தர், ஊனமுற்றோர் புனர்வாழ்வுக் கழகம்), ஞானாம்பிகை, மகேஸ்வரி, சியாமளா (சென். யோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம்), சுகுமார், யசோதா ஆகியோரின் தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24-8-93 அன்று நடைபெற்றதென்பதை உற்றார், உறவினருக்கு அறியத்தருகிறோம்.

9, றக்கா லேன்,
சுண்டிக்குளி.

தகவல்:
கந்தையா நவரேந்திரன்

(5769)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஆவணி மாதம் 25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.